தினபூமி
thinaboomi.com

பூமி: 30 சுற்று: 206 ஆனி 19 | Regd. No.CBE/090/2011-2013

கோவை, வியாழன், ஜூலை 03, 2025 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00




## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு: வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு 6 மாதம் சிறை

...2-ம் பக்கம்

## திடீர் மாரடைப்பு மரணங்களுக்கு கோவிட் தடுப்பூசி காரணமில்லை: மத்திய சுகாதார அமைச்சகம் தகவல்

...3-ம் பக்கம்

## 2-வது டெஸ்ட் போட்டியில் பும்ரா, குல்தீப் நீக்கம் ஏன்? கேப்டன் சுப்மன் கில் பதில்

...6-ம் பக்கம்





● சென்னை ராஜா அண்ணாமலைபுரம் கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் இந்து சமய அறநிலையத்துறை சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் நேற்று 32 இணைகளுக்கு திருமணத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைத்து வாழ்த்தினார். இவ்விழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞானபாலய சுவாமிகள், ஸ்ரீனந்தல் மடாலய ஆதீனம் ஆதி சிவலிங்காச்சார்ய குரு சுவாமிகள், மேயர் ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, தாயகம் கவி, ஜோசப் சாமுவேல் ஆகியோர் உள்ளனர்.

### கேலி செய்பவர்கள் குறித்து கவலையில்லை: பக்தியின் பெயரால் பகல்வேஷம் போடுவர்களால்

# தி.மு.க. அரசின் திட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியவில்லை

### திருமண விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பரபரப்பு பேச்சு

சென்னை, ஜூலை 03-

**கேலி செய்பவர்கள் குறித்து எனக்கு கவலையில்லை என்றும், பக்தியின் பெயரால் பகல்வேஷம் போடுவர்களால் தி.மு.க., அரசின் திட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் சென்னையில் 32 ஏழை ஜோடிகளுக்கு நடந்த திருமண நிகழ்ச்சியில்** முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார். மேலும், எவ்வளவு விமர்சனங்கள் வந்தாலும் மக்கள் பணி தொடரும் என்றும் அவர் உறுதிபட தெரிவித்துள்ளார்.

**32 ஜோடிகளுக்கு...**

சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், அறநிலையத்துறை சார்பில் பொருளாதாரத்தில் பின்தங்கிய 32 ஜோடிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் திருமணம் நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். 32 ஜோடிகளுக்கும் 4 கிராம் தங்கத் தாலி உட்பட ரூ.60,000 மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கப்பட்டன.

**3,127 கோவில்களில்...**

சென்னையில், அறநிலையத்துறை சார்பில் நேற்று 32 ஜோடிகளுக்கு நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று பேசியதாவது:-

தி.மு.க., ஆட்சியில் அறநிலையத்துறை சார்பில் 2,376 திருமணங்கள் நடைபெற்றுள்ளது; அதில் 150 திருமணங்கள் நானே நடத்தி வைத்துள்ளேன். 3,127 கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்தி உள்ளோம். தி.மு.க., ஆட்சியில் 12 ஆயிரம் கோவில்களில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டது.

**ரூ.425 கோடி மானியம்**

997 திருக்கோவில்களுக்கு சொந்தமான 7,650 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது. 6 ஆயிரம் கோடி மதிப்பில் 26 ஆயிரம் கோவில்களில் திருப்பணிகள் நடைபெற்றுள்ளது. 1,000 ஆண்டுகள் பழமையான திருக்கோவில்களை தொன்மை மாறாமல் புனரமைக்க ரூ.425 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. அடியார்க்கு அடியார்போல் அமைச்சர் சேகர்பாபு உழைத்து வருகிறார்; அமைச்சர் சேகர்பாபு செயல்பாபு மட்டுமின்றி புயல் பாபுவாகவும் மாறியுள்ளார்.

> **அவதூறுகள்தான் எனக்கு ஊக்கம், உற்சாகம் அளிக்கின்றன. எவ்வளவு விமர்சனங்கள் வந்தாலும் மக்கள் பணி தொடரும். என்னுடைய பணி மக்கள் பணி அதை அறிந்து நான் செயல்படுவேன். இன்னும் எங்களை கேலி செய்யுங்கள், விமர்சனம் செய்யுங்கள், கொச்சைப்படுத்துங்கள், அதை பற்றி கவலைப்பட போவதில்லை.**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

அறநிலையத்துறை சார்பில் கடந்த 4 ஆண்டுகளில் 2,326 இணையர்களுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டுள்ளது. வெறுப்பையும் சமூகத்தில் பிளவுபடுத்தும் எண்ணங்களை கொண்டவர்களால் எங்களை பார்த்து தாங்கிக் கொள்ள முடியவில்லை. பக்தியின் பெயரால் பகல்வேஷம் போடுவர்களால் தி.மு.க., அரசின் திட்டங்களை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. உண்மையான பக்தர்கள் திராவிட மாடல் அரசை பாராட்டுகின்றனர்.

**மக்கள் பணி தொடரும்**

பல ஆண்டுகால வன்மத்தால் என்னை விமர்சித்து கேலிசித்திரம் வெளியிடுகின்றனர். இதுபோன்ற அவதூறுகள்தான் எனக்கு ஊக்கம், உற்சாகம் அளிக்கின்றன. எவ்வளவு விமர்சனங்கள் வந்தாலும் மக்கள் பணி தொடரும். என்னுடைய பணி மக்கள் பணி அதை அறிந்து நான் செயல்படுவேன். இன்னும் எங்களை கேலி செய்யுங்கள், விமர்சனம் செய்யுங்கள், கொச் சைப் ப டுத் துங் கள், அதை பற்றி கவலைப்பட போவதில்லை. மணமக்கள் பிறக்க போகும் குழந்தைக்கு அழகான தமிழ் பெயர் வையுங்கள். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# தமிழகம் முழுவதும் காவல் தனிப்படைகள் கலைப்பு

### டி.ஜி.பி. சங்கர்ஜிவால் அதிரடி உத்தரவு

சென்னை, ஜூலை 03-

**தமிழகம் முழுவதும் மாவட்டம், மாநகரங்களில் செயல்பட்டு வந்த அங்கீகரிக்கப்படாத போலீஸ் தனிப்படைகளை கலைத்து டி.ஜி.பி., சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார்.**

திருப்புவனத்தில், நகைகள் திருடுபோன புகாரின் பேரில் அஜித்குமார் என்ற வாலிபர் காவல்துறை விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். விசாரணையின் போது போலீசார் தாக்கியதில் அவர் உயிரிழந்த விவகாரம், தமிழக அரசுக்கு பெரும் பிரச்சனையாக மாறியது. இதில், எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும், போலீசாரையும், தமிழக அரசையும் விமர்சனம் செய்து வருகின்றனர்.

இதையடுத்து, சிவகங்கை போலீஸ் எஸ்.பி.,யை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றியும், மானாமதுரை டி.எஸ்.பி.,யை சஸ்பெண்ட் செய்தும், குற்றம் சாட்டப்பட்ட போலீசாரை கைது செய்தும், அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. வழக்கும் சி.பி.ஐ., விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துக்கு முக்கிய காரணமாக இருந்தது, போலீஸ் தனிப்படை என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாநகரிலும், தனிப்படை என்ற பெயரில் போலீசார், அந்தந்த உயர் அதிகாரிகளின் தலைமையில் செயல்படுவது வழக்கம். இந்த போலீசார் அனைவரும், வெவ்வேறு ஸ்டேஷன்களில் பணிப்பட்டியலில் இருந்தாலும், அவர்கள் உயர் அதிகாரிகளின் கூடவே இருந்து, அவர்கள் கூறும் செயல்களை மட்டுமே செய்வது வாடிக்கை. சட்ட விரோதமான செயல்பாடுகளுக்கு உதவியாக இருப்பதற்காகவே, தங்களுக்கு நெருக்கமான போலீசாரை, இந்த தனிப்படைகளில் உயர் அதிகாரிகள் வைத்துக்கொள்கின்றனர்.

இத்தகைய தனிப்படை போலீசார், நாளடைவில் தாங்களாகவே முன்னின்று சட்ட விரோத காரியங்களில் ஈடுபடுவதும் வழக்கம். எனினும், அவர்கள் உயர் அதிகாரிகளின் செல் லப் பிள் ளை க ளாக இருப்பதால் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இருக்காது. இலை மறைவு காய் மறைவாக இருந்த இத்தகைய தனிப்படையினர் அத்துமீறல், சிவகங்கை அஜித் குமார் மரணத்துக்கு பிறகு, வெட்ட வெளிச்சம் ஆகியுள்ளது. இதனால் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுவதை உணர்ந்த தமிழக டி.ஜி.பி., உடனடியாக தனிப்படைகளை கலைக்கும்படி அந்தந்த உயர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். குற்றச் செயல்கள் நடக்கும் போது, அதன் தன்மைக்கு ஏற்ப உரிய நோட்டீஸ் கொடுத்து தனிப்படைகள் அமைத்து விசாரிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# வாகன தணிக்கை என்ற பெயரில் வன்முறையில் ஈடுபடக்கூடாது

### காவலர்களுக்கு ஏ.டி.ஜி.பி. அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 03-

**குடும்பமாக செல்வோரிடம் வாகன தணிக்கை என்ற பெயரில் வன்முறையில் ஈடுபடக்கூடாது என்றும் விசாரணை கைதிகளை காவலர்கள் தேவையில்லாமல் துன்புறுத்தக்கூடாது என்றும் ஏ.டி.ஜி.பி. டேவிட்சன் தேவாசீர்வாதம் அறிவுறுத்தியுள்ளார்.**

திருப்புவனம் இளைஞர் அஜித்குமார் லாக்அப் மரணத்தை தொடர்ந்து போலீஸ் உயரதிகாரிகளுடன் சட்டம்-ஒழுங்கு ஏ.டி.ஜி.பி.டேவிட்சன் தேவாசீர்வாதம் ஆலோசனை நடத்தி பல்வேறு உத்தரவுகள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். இது தொடர்பாக போலீசாருக்கு டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் வழங்கிய உத்தரவுகள், அறிவுறுத்தல்கள் பின்வருமாறு:-

சமூக வலைதளங்களில் தற்போது ஒரு தவறான செய்தி பதிவிடப்பட்டுள்ளது எனில் அதுதான் அதிகமாக பொதுமக்கள் மத்தியில் பரவுகிறது. அது போல ஏதும் பதிவிடப்பட்டிருந்தால் அதன் உண்மை தன்மையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதன் உண்மை தன்மை குறித்து மீடியாவில் பேட்டியாக கொடுக்கலாம். மேலும், உண்மை அறியும் குழுவுக்கு அனுப்பி அதன் உண்மை தன்மையை கண்டிறிய வேண்டும். அது பொய் செய்தியாக இருக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட நபர் மீது சட்ட கருத்து பெற்று வழக்குப்பதிவு செய்ய வேண்டும்.

காவல் நிலையத்துக்கு யாரும் புகார் அளிக்க வந்தால் உடனடியாக எப்.ஐ.ஆர்., சி.எஸ்.ஆர். கொடுக்க வேண்டும். அதில் எவ்வித தாமதமும் இருக்கக் கூடாது. காவல் நிலையத்தில் இதற்காகவே தான் வரவேற்பாளர்கள் நியமிக்கப்பட்டு உள்ளார்கள். இதில் எந்த ஒரு தங்கு தடையும் இருக்கக் கூடாது. மேலும் காவல் நிலையத்தில் புகார் அளிக்க வருபவர்களிடம் பேப்பர் இல்லை பேப்பர் வாங்கிட்டு வா என்றோ, அதிகாரி இல்லை என்று சொல்லி அலைக்கழிக்கவோ திருப்பி அனுப்பவோ கூடாது.

ஏதாவது பாதுகாப்பு அலுவல் என்றால் காவல் நிலையத்திலிருந்து காவலர்களை மொத்தமாக எடுக்கக்கூடாது. தேவை இல்லாமல் அதிகமான காவலர்கள் ஒரே இடத்தில் நியமிக்க கூடாது. பாதுகாப்பு பணிகள் குறித்து சரியான மதிப்பீடு வேண்டும். அதை பொறுத்து தான் பாதுகாப்பு பணிக்கு காவலர்களை நியமிக்க வேண்டும். எவ்வளவு பாதுகாப்பு இருந்தாலும் ஸ்டேஷன்ல குறைந்தபட்சம் காவலர்கள் பணியில் இருக்க வேண்டும். அதாவது சிறிய காவல்நிலையம் என்றால் 5 காவலர்களும், மீடியம் காவல்நிலையம் என்றால் 10 காவலர்களுக்கு குறையாமலும், பெரிய காவல்நிலையம் என்றால் 15 காவலர்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும். காவல்நிலையத்தில் பணியில் ஆள் இல்லாமல் இருக்க கூடாது.

சோசியல் மீடியாவில் காவல்துறைக்கோ அரசுக்கு எதிராகவோ, அரசின் திட்டங்களுக்கு எதிராகவோ, தவறான பதிவுகளை யாரும் பதிவு செய்திருப்பின் அப்பதிவின் மீது சரியான சட்ட கருத்துரை பெற்று சம்பந்தப்பட்ட நபர் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டும். மேலும் தங்கள் காவல் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் யாரேனும் அபாயகரமான ஆயுதங்கள் வைத்துக் கொண்டோ அல்லது பைக் ஸ்டண்ட் செய்தோ ரீல்ஸ் போன்ற பதிவுகள் செய்யக்கூடாது. அதற்கு அனுமதிக்கவும் கூடாது. அப்படி பதிவு செய்பவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோவில்களில் சாமி கும்பிடுவது, திருவிழா நடத்துவது, போன்ற நிகழ்வுகளில் சாதிய ரீதியான பாகுபாடு மற்றும் மோதல்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தகுந்த முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும். போதை பொருட்களுக்கு எதிராக தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வுகள் நடத்தப்பட வேண்டும் மற்றும் சம்பந்தப்பட்ட எதிரிகளுக்கு தகுந்த கவுன்சிலிங் வழங்க வேண்டும்.

முக்கிய பாதுகாப்பு பணிகளில் பெண் காவலர்களை நியமித்தலை தவிர்க்க வேண்டும். முக்கிய பாதுகாப்பு பணிகளுக்கு முன்கூட்டியே தயார் செய்ய வேண்டும். அதில் காவலர்கள், பெண் காவலர்கள், ஆயுதப்படை காவலர்கள், சிறப்பு காவல் படையினர் எவ்வளவு என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். சாலை மறியல், ஆர்ப்பாட்டம், போராட்டம் போன்ற பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் காவலர்களுக்கு தகுந்த பயிற்சி கொடுக்க வேண்டும் தேவையில்லாமல் லத்தியை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

(கடைசி பக்கம் பார்க்க)

### கோவில் காவலர் மரண வழக்கு:

# திருப்புவனத்தில் மதுரை மாவட்ட நீதிபதி விசாரணை

திருப்புவனம், ஜூலை 03-

**காவலர்கள் விசாரணையில் கொல்லப்பட்ட அஜித்குமார் வழக்கு குறித்து விசாரிக்க உயர் நீதிமன்றம் நியமித்த மாவட்ட நீதிபதி ஜான்சுந்தர்லால் சுரேஷ் திருப்புவனத்தில் விசாரணை நடத்தினார்.**

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் தனிப்படை போலீஸார் கொடூரமாக தாக்கியதில் உயிரிழந்தார். இந்த வழக்கை நேற்று முன்தினம் உயர் நீதிமன்றம் மதுரை கிளை விசாரித்தது. அப்போது உயர் நீதிமன்ற நீதிபதிகள் காவல்துறையினரிடமும், அரசிடமும் சரமாரியாக பல்வேறு கேள்விகளை முன்வைத்தனர்.

மேலும் இந்த வழக்கு குறித்து மதுரை மாவட்ட நீதிபதி ஜான்சுந்தர்லால் சுரேஷ் விசாரணை செய்ய உத்தரவிட்டனர். இந்நிலையில் நேற்று திருப்புவனத்தில் மாவட்ட நீதிபதி ஜான்சுந்தர்லால் சுரேஷ் விசாரணை நடத்தினார். அவர் திருப்புவனம் காவல் நிலையம், மடப்புரம் கோவில் உதவிஆணையர் அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் விசாரணை செய்தார். மேலும் தனிப்படை காவலர்கள் அஜித்குமாரை அழைத்துச் சென்று விசாரித்த இடங்களில் நீதிபதி ஆய்வு செய்ததாக தெரிகிறது. அஜித்குமாரின் குடும்பத்தினர் மற்றும் பொதுமக்களிடம் விசாரணை நடத்த நீதிபதி திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

### உயிரிழந்த கோவில் காவலர் குடும்பத்தினருக்கு

# வீட்டுமனை பட்டா, சகோதரருக்கு அரசு வேலைக்கான பணி ஆணை

### தமிழ்நாடு அரசு சார்பில் அமைச்சர் நேரில் வழங்கினார்



திருப்புவனம், ஜூலை 03-


**போலீஸ் விசாரணையின்போது உயிரிழந்த திருப்புவனம் இளைஞர் அஜித்குமார் சகோதரர் நவீனுக்கு அரசு வேலைக்கான பணி நியமன ஆணையை முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தலை அடுத்து அமைச்சர் பெரியகருப்பன் நேற்று வழங்கினார். மேலும், அஜித்குமாரின் குடும்பத்தினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவையும் அவர் வழங்கினார்.**

முன்னதாக நேற்று முந்தினம் அஜித்குமாரின் தாய், சகோதரரிடம் தொலைபேசியில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், அது தொடர்பான வீடியோவையும் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்திருந்தார். அதில், திருப்புவனம் இளைஞருக்கு நடந்த கொடுமை யாருக்கும் நடக்கக் கூடாதது, யாராலும் நியாயப்படுத்த முடியாத தவறு. கடமை தவறிக் குற்றம் இழைத்தவர்களுக்கு நிச்சயம் இந்த அரசு தண்டனை பெற்றுத் தரும்! பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதலாக நிற்கும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், நேற்று (ஜூலை 2) காலை, அமைச்சர் பெரியகருப்பன் அஜித்குமாரின் சகோதரர் நவீனுக்கு அரசு வேலைக்கான பணி நியமன ஆணையை வழங்கியதோடு அஜித்குமார் குடும்பத்தினரிடம் இலவச வீட்டு மனைக்கான பட்டாவையும் வழங்கினார். நவீனுக்கு ஆவின் நிறுவனத்தில் வேலை வழங்கப்பட்டுள்ளதாக தகவல் நிலவுகிறது.

பின்னர் பேசிய அமைச்சர் பெரியகருப்பன், அஜித்குமார் குடும்பத்துக்கு உதவி செய்ய அரசு உத்தரவு பிறப்பிருந்தது. அதன்படி, அஜித்குமாருக்கு அவரது கல்வித் தகுதிக்கு ஏற்ப அரசு வேலை வழங்கப்பட்டுள்ளது. கூடவே அஜித்குமார் குடும்பத்துக்கான இலவச வீட்டு மனைப் பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது. அஜித்குமாரின் குடும்பத்தினருக்கு தி.மு.க., சார்பில் முதற்கட்டமாக ரூ.5 லட்சம் வழங்கி உள்ளோம். அண்ணா பல்கலைக்கழக வழக்கில் விரைந்து விசாரித்து ஞானசேகரனுக்கு தண்டனை வாங்கிக் கொடுத்தது போல இளைஞர் அஜித்குமாரின் வழக்கிலும் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தரப்படும். இவ்வாறு அவர் கூறினார்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -287.60 | -88.40 |
| பாயிண்ட் 83,409.69 | பாயிண்ட் 25,453.40 |



| தங்கம் | |
|---|---|
| 1 சவரன் | ₹72,520 |
| 1 கிராம் | ₹9,065 |



| வெள்ளி | |
|---|---|
| 1 கிலோ | ₹120,000 |
| 1 கிராம் | ₹120.00 |

| டாலர் | |
|---|---|
| | ₹85.69 |

| பெட்ரோல் | டீசல் |
|---|---|
| ₹102.63 | ₹94.24 |



## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு: ஷேக் ஹசீனாவுக்கு 6 மாதம் சிறை

**டாக்கா, ஜூலை 03-**

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு ஆறு மாத சிறை தண்டனை விதித்து சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கி உள்ளது.




வங்கதேசத்தில் மாணவர்கள் போராட்டம் காரணமாக பிரதமர் பதவியில் இருந்து விலகிய ஷேக் ஹசீனா, இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளார். அந்நாட்டில் அவர் மீது பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டு உள்ளன. அதில் ஆஜராக வேண்டும் என நீதிமன்றங்கள் உத்தரவு பிறப்பித்துள்ளன. அவரை நாடு கடத்தும்படி முகமது யூனுஷ் தலைமையிலான இடைக்கால அரசு மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளது.

இந்நிலையில், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஷேக் ஹசீனாவுக்கு ஆறு மாத சிறை தண்டனை வழங்கி சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கி உள்ளது. இந்த தீர்ப்பினை முகமது கோலம் மோர்டோசா மோசம்தர் தலைமையிலான 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கி உள்ளது. பிரதமர் பதவியில் இருந்து ஹசீனா பதவி விலகி 11 மாதங்கள் முடிந்த நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட முதல் தண்டனை இதுவாகும்.

## சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆய்வுகளை தொடங்கினார் சுக்லா

**நியூயார்க், ஜூலை 03-**

விண்வெளி நிலையத்தில் ஆய்வுகளை சுபான்ஷூ சுக்லா தொடங்கினார்.



அமெரிக்காவின் புளோரிடாவில் இருந்து, 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்தின், 'டிராகன்' விண்கலம் வாயிலாக, 'ஆக்சியம் மிஷன் 4' திட்டத்தில், இந்திய வீரர் சுபான்ஷூ சுக்லா உட்பட நான்கு பேர், சமீபத்தில், சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு சென்றனர்.அங்கு சென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையை சுபான்ஷூ சுக்லா பெற்றுள்ளார்.கடந்த 25ஆம் தேதி விண்வெளிக்கு புறப்பட்டு, 26-ம் தேதி சர்வதேச விண்வெளி மையத்தை அடைந்த சுபான்சு சுக்லா, கடந்த 6 நாட்களாக விண்வெளியில் பல்வேறு விதமான பணிகளை மேற்கொண்டு வந்தார்.

27-ம் தேதி நுண்ணீர்ப்பு விசை மண்டலம் குறித்தும், அதனால் விண்வெளியில் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். 28-ஆம் தேதி முதல், ஈர்ப்பு விசையின் தாக்கம் இல்லாத விண்வெளியில், விதை எப்படி முளைக்கும்? அங்கு வளரும் தாவரங்களின் தன்மை குறித்து ஆய்வுகளை செய்து வருகிறார். இதற்காக, தன்னுடன் எடுத்துச் சென்ற வெந்தயம் மற்றும் பயிறு விதைகளை சுபான்ஷூ சுக்லா வளர்க்கத் தொடங்கியுள்ளார். பூமி திரும்பும் போது, விண்வெளியின் தாவரங்களின் வளர்ச்சி மற்றும் பூமியின் ஈர்ப்பு விசையில் வளரும் தாவர வளர்ச்சியோடு ஒப்பிட்டு, ஆய்வறிக்கை தயார் செய்ய உள்ளார்.

## காசாவில் 60 நாள் போர் நிறுத்தம்; இஸ்ரேல் பிரதமர் ஒப்புதல்: ட்ரம்ப்

**வாஷிங்டன், ஜூலை 03-**

காசாவில் 60 நாள் போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல் ஒப்புதல் அளித்துள்ளதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார்.



காசாவில் 60 நாள் போர் நிறுத்தத்தை இறுதி செய்வதற்கான நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது. போரை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து தரப்பினருடனும் இணைந்து நாங்கள் பணியாற்றுவோம்' என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்தார்.

இதுகுறித்து அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "எனது பிரதிநிதிகள் நேற்று காசா தொடர்பாக இஸ்ரேலியர்களுடன் பயனுள்ள சந்திப்பை நடத்தினர். காசாவில் 60 நாள் போர் நிறுத்தத்தை இறுதி செய்வதற்கு தேவையான நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது, அதே நேரத்தில் போரை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து தரப்பினருடனும் நாங்கள் இணைந்து பணியாற்றுவோம்.

போர்நிறுத்தம் ஏற்பட கடுமையாக உழைத்த கத்தார் மற்றும் எகிப்தியர்கள், இதற்கான இறுதி திட்டத்தை வழங்குவார்கள். மத்திய கிழக்கின் நன்மைக்காக, ஹமாஸ் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இல்லையெனில் நிலைமை சிறப்பாக மாறாது, மோசமாகிவிடும்." என்று கூறி போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஹமாஸை எச்சரித்தார்.

## வெளிநாட்டு மாணவர்களுக்கு புதிய கட்டுப்பாடு: அமெரிக்க அரசு முடிவு

**நியூயார்க், ஜூலை 03-**

அமெரிக்காவில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கு அந்நாட்டு அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது. சமீபத்தில் சில வெளிநாட்டு மாணவர்களின் விசா ரத்து செய்யப்பட்டது. இந்த நிலையில் வெளிநாட்டு மாணவர்களுக்கு புதிய கட்டுப்பாட்டை விதிக்க அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி வெளிநாட்டு மாணவர்களின் விசாவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் தகுதி வாய்ந்ததாக மாற்றும் விதியை உள்நாட்டு பாதுகாப்புத்துறை முன்மொழிந்துள்ளது. சர்வதேச மாணவர்களை நிலையான தங்கும் காலங்களுக்கு உட்படுத்தும் வகையில் இந்த விதி உள்ளது.

தற்போது சர்வதேச மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் தங்கள் முழுநேர மாணவர் அந்தஸ்தை கடைபிடித்தால் அவர்கள் படிப்பு முடியும் வரை அமெரிக்காவில் தங்கலாம். இதை முன்னரே தீர்மானிக்கப்பட்ட தங்கும் காலத்திற்கு மாற்ற டிரம்ப் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இதனால் விசாவில் ஒரு நிலையான காலாவதி தேதியுடன் சர்வதேச மாணவர்கள் அடிக்கடி விசா நீட்டிப்புகளுக்கு விண்ணப்பிக்க வேண்டியதிருக்கும். இது கூடுதல் தேவையற்ற தாமதங்கள், நிதிச் சுமை மற்றும் மாணவர்களுக்கு நிச்சயமற்ற தன்மையை உருவாக்கும் என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## அமெரிக்காவில் உள்ள இஸ்கான் கோவில் மீது துப்பாக்கி சூடு சம்பம்: இந்தியா கண்டனம்

**நியூயார்க், ஜூலை 03-**

அமெரிக்காவின் உட்டா மாகாணத்தில் ஸ்பானிஷ் போர்க் என்ற பகுதியில் இந்து மத கோவிலான இஸ்கான் ராதாகிருஷ்ணன் கோவில் உள்ளது. இந்த கோவில் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

20 முதல் 30 துப்பாக்கி குண்டுகள் வரை கோவிலின் கட்டிடம் மற்றும் அதனை சுற்றியுள்ள கட்டிடங்கள் மீது பாய்ந்துள்ளன. இது தொடர்பான புகைப்படங்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இரவு நேரத்தில் பக்தர்கள் கோவிலுக்குள் இருந்தபோது இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இச்சம்பவத்துக்கு சான் பிரான்சிஸ்கோ நகரில் உள்ள இந்திய தூதரகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தூதரகம் கூறும்போது, இஸ்கான் கோவில் மீது நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம். அனைத்து பக்தர்களுக்கும், சமூகத்திற்கும் துணைத் தூதரகம் முழு ஆதரவை வழங்குகிறது. குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த உள்ளூர் அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளது.

## பகல்காம் தாக்குதலுக்கு கண்டனம்: குவாட் அமைப்பு கூட்டறிக்கை

**வாஷிங்டன், ஜூலை 03-**

குவாட் அமைப்பு மாநாட்டில் காஷ்மீரின் பகல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய குவாட் அமைப்பின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாடு அமெரிக்காவின் வாஷிங்டனில் நடந்தது. இதில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், அமெரிக்க அமைச்சர் மார்கோ ரூபியோ, ஜப்பான் அமைச்சர் தகேஷி இவாயா, ஆஸ்திரேலிய அமைச்சர் பென்னி வோங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் காஷ்மீரின் பகல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில், "பகல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம். இந்தக் கண்டிக்கத்தக்க செயலுக்குக் காரணமானவர்கள், ஏற்பாட்டாளர்கள் மற்றும் நிதியுதவி செய்தவர்கள் மீது எந்த தாமதமும் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அனைத்து ஐ.நா. உறுப்பு நாடுகளும் சர்வதேச சட்டம் மற்றும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களின் கீழ் தங்கள் கடமைகளுக்கு இணங்க, இந்த விஷயத்தில் அனைத்து தொடர்புடைய அதிகாரிகளுடனும் தீவிர மாக ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காசாவில் 60 நாள் போர் நிறுத்தம்; இஸ்ரேல் பிரதமர் ஒப்புதல்: ட்ரம்ப்

**வாஷிங்டன், ஜூலை 03-**


காசாவில் 60 நாள் போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல் ஒப்புதல் அளித்துள்ளதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார்.

காசாவில் 60 நாள் போர்நிறுத்தத்தை இறுதி செய்வதற்கான நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது. போரை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து தரப்பினருடனும் இணைந்து நாங்கள் பணியாற்றுவோம்' என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்தார்.

இதுகுறித்து அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "எனது பிரதிநிதிகள் நேற்று காசா தொடர்பாக இஸ்ரேலியர்களுடன் பயனுள்ள சந்திப்பை நடத்தினர். காசாவில் 60 நாள் போர் நிறுத்தத்தை இறுதி செய்வதற்கு தேவையான நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது, அதே நேரத்தில் போரை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து தரப்பினருடனும் நாங்கள் இணைந்து பணியாற்றுவோம்.

போர்நிறுத்தம் ஏற்பட கடுமையாக உழைத்த கத்தார் மற்றும் எகிப்தியர்கள், இதற்கான இறுதி திட்டத்தை வழங்குவார்கள். மத்திய கிழக்கின் நன்மைக்காக, ஹமாஸ் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இல்லையெனில் நிலைமை சிறப்பாக மாறாது, மோசமாகிவிடும்." என்று கூறி போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஹமாஸை எச்சரித்தார்.

**03-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எதிரிகள் அடி பணிவர். ஆரோக்கியம் பெருகும். நல்ல நேரத்தில் நண்பர்கள் கை கொடுப்பர். புதுப் பெண்கள் சிநேகத்தால் துள்ளாத மனமும் துள்ளும். தனவரவு கூடும். பயண சுகம் உண்டு.

**ரிஷபம்:-** இன்று, எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் இகழ்ச்சியே மிஞ்சும். குழந்தைகளின் உடல் நிலையில் அக்கறை தேவை. பயணத்தில் பார்த்துச் செல்வது அவசியம்.

**மிதுனம்:-** அன்னையின் உடல் நிலையில் அக்கறை தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்ய வேண்டிய நாள். வாகன சுகம் குறையும். தனவரவும் தூக்கமும் குறையும்.

**கடகம்:-** மனத்தெம்பும், மனமகிழ்ச்சியும் அதிகரிக்கும். தனலாபம், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகங்கள் பொங்கும். தொழில் விரிவாக்கத்துக்கு அரசு உதவிகள் கிடைக்கும். அனைத்து விருப்பங்களும் நிறைவேறும்.

**சிம்மம்:-** சுமாரான நாள். சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய நாள். படிப்பில் அதிக கவனம் தேவை. அலட்சியம் அல்லல் தரலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தள்ளிப் போடலாம்.

**கன்னி:-** பெரியோர் நேசம், வாகன யோகம், பதவி உயர்வு, மனத் திருப்தி, தொழில், வியாபாரத்தில் பணவரவு என இராஜயோகங்கள் தரும் நாள். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும்.

**துலாம்:-** வீண் வம்பை விலைக்கு வாங்காதீர்கள். பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். புதிய பொருட்களை தேவைப்பட்டால் மட்டும் வாங்கவும். மாற்றங்கள் நிகழும். குறிக்கோளின்றி கும்பத்தார், மனம் போன போக்கில் அலைய நேரும்.

**விருச்சிகம்:-** பெண்களால் இலாபம், அவர்கள் நட்பால் சுகம் ஏற்படும் இனிய நாள். கல்வியில் தேர்ச்சி உண்டு. ஆரோக்கியம் மேம்படும். பிரிந்தவர் சேரும் பொன்னான நாள். எல்லா வகையிலும் ஏற்றம் பெறும் நாள்.

**தனுசு:-** இன்று, உங்கள் செயல்கள் அனைத்திலும் வெற்றி கிட்டும். சுயநம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவை தட்டும். வாழ்க்கையில் முக்கிய திருப்பங்களை எதிர் பார்க்கலாம்.

**மகரம்:-** தெய்வீக காரியங்களில் ஈடுபடுவீர்கள். புத்திர பாக்கியம் ஏற்படும். புகழ் வாங்கும். காமம் தலைதூக்கும். அடக்கி வாசிக்க வேண்டிய நாள். எல்லா வகையிலும் ஏற்றம் தரும் நாள்.

**கும்பம்:-** சுமாரான நாள், அடக்கி வாசிக்க வேண்டிய நாள். உடல் நிலையில் அக்கறை தேவை, தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கவேண்டிய நாள். பணிவோடு இருக்கப் பயன் தரும் நாள்.

**மீனம்:-** இன்று, இனிய வாகன யோகம் ஏற்படும். காதல் வயப்படும் நாள். இனிய பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும் நாள். அரசால் ஆதாயம் உண்டு. இந்த நாள் இனிய நாள்.

## அ.இ.அ.தி.மு.க. சேலம் அம்மாபேட்டை செயலாளர் நீக்கம்: இ.பி.எஸ். அறிவிப்பு

**சென்னை, ஜூலை 03-**

சேலம் மாவட்டம் அம்மா பேட்டை அதிமுக செயலாளர் மஹபூப் அலி அக்கட்சியிலிருந்து நீக்கி வைக்கப்பட்டுள்ளதாக எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இது குறித்து அ.தி.மு.க. பொதுசெயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:-

அ.தி.மு.க.வின் கொள்கை-குறிக்கோள்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும் கழகத்தின் சட்ட திட்டங்களுக்கு மாறுபட்டு, கழகத்தின் ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்து கொண்டதாலும், கழகத்தின் கண்ணியத்திற்குமாசு ஏற்படும் வகையில், கழகக் கட்டுப்பாட்டை மீறி கழகத்திற்கு களங்கமும்அவப் பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினாலும், சேலம் மாநகர் மாவட்டத்தைச் சேர்ந்த அம்மா பேட்டை பகுதி 3 அ.தி.மு.க. செயலாளர் அபு (எ) மஹபூப் அலி, இன்று (நேற்று) முதல் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்கிவைக்கப்படுகிறார்.

அதிமுகவினர் யாரும் இவருடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சர்வதேச அணுசக்தி அமைப்புடன் ஒத்துழைப்பு இடைநிறுத்தம்: ஈரான்

**டெஹ்ரான், ஜூலை 03-**

ஐ.நா.வின் அணுசக்தி காண்காணிப்பு அமைப்பான சர்வதேச அணுசக்தி அமைப்பு உடனான ஒத்துழைப்பை இடைநிறுத்தம் செய்து ஈரான் அதிபர் மசூத் பெசஸ்கியன் உத்தரவிட்டுள்ளார்.

ஈரான் உடனான அணு சக்தி தொடர்பான அமெரிக்காவின் பேச்சு தோல்வியில் முடிந்தது. மறுபக்கம் 'ஈரான் அணுசக்தியை அணு ஆயுதம் தயாரிக்க திட்டமிட்டுள்ளது; அது எங்களை குறி வைக்கும்' என்று, இஸ்ரேல் கூறியது. இதையடுத்து, ஈரான் மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. அதில் அமெரிக்காவும் இணைந்தது.

ஈரானின் மூன்று முக்கிய அணுசக்தி மையங்களான போர்டோ, நடான்ஸ், இஸ்பஹான் ஆகியவை தாக்கப்பட்டதாக அமெரிக்காவும், இஸ்ரேலும் கூறுகின்றன. ஆனால், இந்த தாக்குதல்களுக்கு முன்பாகவே, 400 கிலோ செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை பாதுகாப்பான இடத்துக்கு ஈரான் மாற்றியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் இருந்து, 10 அணு ஆயுதங்களை தயாரிக்க முடியும் என்று கூறப்படுகிறது. தற்போது ஈரான் அணுஆயுத திட்டங்களை சீரமைத்து வருவதாக தெரிகிறது. இந்நிலையில் ஐ.நா.வின் அணுசக்தி காண்காணிப்பு அமைப்பான சர்வதேச அணுசக்தி அமைப்பு உடனான ஒத்துழைப்பை இடைநிறுத்தம் செய்து ஈரான் அதிபர் மசூத் பெசஸ்கியன் உத்தரவிட்டுள்ளார். ஈரான் பார்லிமென்டில் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், அதிபர் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

## நாமக்கலில் பணியில் இருந்த பெண் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் காவல் நிலையத்தில் உயிரிழப்பு

**நாமக்கல், ஜூலை 03-**

பெண் சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் காவல் நிலையத்தில் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

நாமக்கலில் சிறப்பு சப்-இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்தவர் காமாட்சி. இவர் நேற்ற காவல் நிலையத்தில் ஓய்வறைக்கு சென்று ஓய்வு எடுத்துள்ளார். ஆனால், ஓய்வறையில் இருந்து அவர் நீண்ட நேரமாக வெளியே வராததால் சந்தேகமடைந்த சக போலீசார் ஓய்வறையின் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்துள்ளனர்.

அப்போது, சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் காமாட்சி மயங்கிய நிலையில் கிடந்துள்ளார். அவரை மீட்ட போலீசார் மருத்துவமனையில் அனுமதித்தனர். காமாட்சியை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர். காமாட்சி மாரடைபால் உயிரிழந்தாரா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா? என்பது குறித்து ராசிபுரம் டி.எஸ்.பி. விஜயகுமார் தலைமையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

## ஹிந்து தலைவர்கள் கொலை வழக்கில் 2 பயங்கரவாதிகள் கைது

**சென்னை, ஜூலை 03-**

ஹிந்து முன்னணி அலுவலகம் மீது வெடிகுண்டு வீச்சு; அத்வானி வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து, 'பைப் குண்டு' வைத்தது என, பல்வேறு வழக்குகளில் 30 ஆண்டுகளாக தேடப்பட்டு வந்த பயங்கரவாதிகள் அபுபக்கர் சித்திக், முகமது அலி ஆகியோர், ஆந்திராவில் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 2012 மற்றும் 2013ம் ஆண்டுகளில், மதுரையில் பால் வியாபாரி சுரேஷ், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் பூசாரி முருகன், வேலூரில் பா.ஜ., மருத்துவ பிரிவு செயலர் அரவிந்த் ரெட்டி, பா.ஜ., மாநில பொதுச்செயலர் ஆடிட்டர் ரமேஷ் உள்ளிட்டோர் அடுத்தடுத்து கொல்லப்பட்டனர்.

மேலும், மாநிலம் முழுதும் ஹிந்து அமைப்பு நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் குறிவைத்து தாக்கப்பட்டனர். இது, போலீசாரை அதிர்ச்சியடைச் செய்தது. இதுகுறித்து, சி.பி.சி.ஐ.டி., பிரிவின் எஸ்.ஐ.டி., எனப்படும் சிறப்பு புலனாய்வு குழு அதிகாரிகள் விசாரித்தனர். இது தொடர்பாக, மதுரையைச் சேர்ந்த அல் - உம்மா பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த போலீஸ் பக்ருதீன், பிலால் மாலிக், பன்னா இஸ்மாயில் உள்ளிட்டோர், ஆந்திர மாநிலத்தில் கைது செய்யப்பட்டனர். பயங்கரவாத கும்பலின் தளபதியாக செயல்பட்டு வந்த, நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரைச் சேர்ந்த அபுபக்கர் சித்திக்; திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையத்தைச் சேர்ந்த முகமது அலி ஆகியோர் தப்பிவிட்டனர்.

மொத்த கொலைகளுக்கும் மூளையாக செயல்பட்டது அபுபக்கர் சித்திக் தான். ஹிந்து அமைப்பு தலைவர்கள் மற்றும் பா.ஜ., நிர்வாகிகளை எப்படி கொலை செய்ய வேண்டும்; போலீசாரிடம் சிக்காமல் இருப்பது எப்படி என்பது குறித்து, போலீஸ் பக்ருதீன் உள்ளிட்டோருக்கு அபுபக்கர் சித்திக் தான் கட்டளை பிறப்பித்துள்ளார் என்பதும் தெரியவந்தது. அபுபக்கர் சித்திக் மற்றும் முகமது அலி ஆகியோர், வெளிநாடுகளுக்கு தப்பி இருக்கலாம் என கூறப்பட்டது. தொடர் கொலைகள் நடப்பதற்கு முன், மஹாராஷ்டிரா மாநிலம் மும்பை போலீசாரால் அபுபக்கர் சித்திக் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, சிறையில் இருந்து வெளியே வந்துள்ளார். இதனால், இவர் மும்பையில் பதுங்கி இருக்கலாம் என்றும் போலீசார் தொடர்ந்து தேடி வந்தனர்.

வடமாநில பயங்கரவாத கும்பல்களுடன், இருவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இதனால், இருவரும் மேற்கு வங்கம், குஜராத், பீஹார் உள்ளிட்ட மாநிலங்களுக்கு சென்று இருக்கலாம் என்றும் தேடுதல் வேட்டை நடந்தது. தொடர் விசாரணையில், 1995ம் ஆண்டு, தமிழகத்தில் நடந்த பல்வேறு வெடிகுண்டு சம்பவங்கள், மத ரீதியான கொலைகளுக்கு அபுபக்கர் சித்திக் திட்டம் தீட்டியதும் தெரியவந்தது. அதே ஆண்டில், சென்னை சிந்தாதிரிப்பேட்டையில், ஹிந்து முன்னணி அலுவலகம் மீது வெடிகுண்டு வீச்சு; நாகூரில் தங்கம் முத்துகிருஷ்ணன் என்பவரின் வீட்டுக்கு பார்சல் வெடிகுண்டு அனுப்பி வெடிக்க வைத்தது, அபுபக்கர் சித்திக் தான் என்பது உறுதி செய்யப்பட்டது.

மேலும், 1999ல், சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகம் உட்பட சென்னை, கோவை, திருச்சி மற்றும் கேரள மாநிலத்தில் ஏழு இடங்களில் வெடிகுண்டு வைத்த வழக்கிலும், அபுபக்கர் சித்திக் தான் முக்கிய குற்றவாளி என்பதும் போலீசாருக்கு தெரியவந்தது. கடந்த 2011-ல், மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே ஆலம்பட்டி தரைப்பாலம் வழியாக, பா.ஜ., மூத்த தலைவர் அத்வானியின் ரத யாத்திரை நடக்க இருந்த நிலையில், அங்கு அபுபக்கர் சித்திக் தலைமையில் தான் பைப் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது.

பின், 2012ல், வேலூரில் நடந்த டாக்டர் அரவிந்த் ரெட்டி கொலை; 2013ல், கர்நாடக மாநிலம் பெங்களூரு பா.ஜ., அலுவலகம் மீது வெடிகுண்டு வீச்சு உள்ளிட்ட சம்பவங்களும், அபுபக்கர் சித்திக் தலைமையில் தான் நடந்துள்ளன. இந்த வழக்குகளில் தேடப்பட்டு வந்த அபுபக்கர் சித்திக் எங்கே பதுங்கி இருக்கிறார் என்பதை கூட, 30 ஆண்டுகளாக போலீசாரால் கண்டறிய முடியவில்லை. அதேபோல, முகமது அலி, யூனுஸ் மற்றும் மன்சூர் என்ற பெயர்களில், 1999-ல் தமிழகம் மற்றும் கேரளாவில் ஏழு இடங்களில் வெடிகுண்டுகளை வைத்துள்ளார்.

இந்நிலையில், அபுபக்கர் சித்திக் மற்றும் முகமது அலி ஆகியோர், ஆந்திர மாநிலம் அன்னமையா மாவட்டத்தில் பதுங்கி இருக்கும் தகவல், மத்திய உளவுத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்தது. அவர்கள், அத்தகவலை உறுதி செய்த பின், தமிழக போலீசாருக்கு தகவலை தெரியப்படுத்தினர். ஆந்திராவுக்கு சென்ற தமிழக காவல் துறையின் ஏ.டி.எஸ்., பயங்கரவாத தடுப்பு பிரிவு போலீசார், இருவரையும் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

### தைரியமா இருங்க, நாங்க இருக்கோம்:

# அஜித்குமார் குடும்பத்தினருக்கு எடப்பாடி பழனிசாமி ஆறுதல்



சென்னை, ஜூலை 03-
சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் காவல் நிலையத்தில் காவலர்கள் தாக்குதலில் கொல்லப்பட்ட அஜித்குமாரின் குடும்பத்தினருக்கு செல்போன் அழைப்பு மூலம் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆறுதல் தெரிவித்தார்.

அப்போது அவர் பேசியதாவது:- துரதிர்ஷ்டவசமாக சில மனித மிருகங்கள் கடுமையாக தாக்கியதில் உங்கள் மகன் அஜித் குமார் உயிரிழந்திருக்கிறார். தைரியமாக இருங்கள். உங்களுக்கு நீதி கிடைக்கும் வரை, அ.தி.மு.க. உங்களுக்கு துணை நிற்கும். நாங்களும் துணை நிற்போம். இது மீள முடியாத துயரம். ஒரு தாய் தன்னுடைய மகனை இழப்பது என்பது கொடுமையான விஷயம். இது யாராலும் மன்னிக்க முடியாதது. பெற்ற தாய்க்கு மட்டுமே அதன் வலி தெரியும்.

உங்களுக்கு எவ்வளவு ஆறுதல் சொன்னாலும் அது ஈடாகாது. இருந்தாலும், நீங்கள் மனம் தளராமல் இருந்தால் தான் வீட்டில் உள்ளவர்களும் மனம் நிம்மதியுடன் இருப்பார்கள். நீதிமன்றத்தில் அ.தி.மு.க. சார்பில் வழக்கு தொடர்ந்திருக்கிறோம். நீதிமன்றத்தின் மூலம் நீதி நிலை நாட்டப்படும்.

உங்களுக்கு நியாயம் கிடைக்கும். மனம் தளராமல் இருங்கள். எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

### தயாரிப்பாளர் சங்கம் - பெப்சி பிரச்சனை:

# மத்தியஸ்தரை நியமித்தது ஐகோர்ட்

சென்னை, ஜூலை 03-
தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் மற்றும் பெப்சி இடையேயான பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஓய்வுபெற்ற நீதிபதி எஸ்.கோவிந்தராஜை மத்தியஸ்தராக நியமித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்பட தொழிலாளர் சம்மேளனம் என்ற பெயரில் பெப்சிக்கு எதிராக தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் புதிய சங்கத்தை துவங்கி இருப்பதாக கூறி, பெப்சி குற்றம்சாட்டி வந்தது. இந்நிலையில், தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்க உறுப்பினர்கள் தயாரிக்கும் படங்களில் பெப்சி அமைப்பின் உறுப்பினர்கள் பணியாற்றுவதை நிறுத்த வேண்டும்.

ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என தென்னிந்திய திரைப்பட தொழிலாளர் சம்மேளன உறுப்பினர்களுக்கு ஏப்ரல் 2-ம் தேதி பெப்சி கடிதம் அனுப்பி இருந்தது. இதனால் படப்பிடிப்பு மற்றும் படத் தயாரிப்பு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி, தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

இந்த வழக்கு கடந்தமுறை விசாரணைக்கு வந்தபோது, இரு சங்கங்கள் இடையேயான பிரச்சினையை பேசி தீர்ப்பதற்கு ஏன் மத்தியஸ்தரை நியமிக்கக் கூடாது? என கேள்வி எழுப்பி, யாரை மத்தியஸ்தராக நியமிக்கலாம் என கலந்தாலோசித்து தெரிவிக்க இரு தரப்புக்கும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கு நீதிபதி கே.குமரேஷ் பாபு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது இருதரப்பிலும், ஓய்வு பெற்ற நீதிபதி எம். கோவிந்தராஜை மத்தியஸ்தராக நியமிக்கலாம் என ஒப்புதல் தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, சென்னை உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி எம்.கோவிந்தராஜை மத்தியஸ்தராக நியமித்து உத்தரவிட்டார்.

### கனமழை, திடீர் வெள்ளப்பெருக்கு:

# இமாச்சலப்பிரதேசத்தில் 10 பேர் பலி



சிம்லா, ஜூலை 03-
இமாச்சலப் பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை, மேகவெடிப்பு மற்றும் திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக கடந்த 32 மணி நேரத்தில 10 பேர் உயிரிழந்தனர், 34 பேர் காணாமல் போயினர். மாநிலம் முழுவதும் நூற்றுக்கணக்கான சாலைகள் மற்றும் மின்மாற்றிகள் சேதமடைந்தன.

செவ்வாய்க்கிழமை மாநிலம் முழுவதும் 11 மேக வெடிப்பு சம்பவங்கள், 4 இடங்களில் திடீர் வெள்ளம் மற்றும் ஒரு பெரிய நிலச்சரிவு சம்பவங்கள் நடந்தன. அவற்றில் பெரும்பாலானவை மண்டி மாவட்டத்தில் நடந்தன. திங்கள்கிழமை மாலை முதல் மண்டியில் மட்டும் 253.8 மிமீ மழை பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மாநிலத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட நகரங்களான கோஹர், கர்சோக் மற்றும் துனாக் ஆகிய இடங்களில் தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையின் தலா இரண்டு குழுக்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. கடந்த 32 மணி நேரத்தில் மட்டும் மண்டியில் இருந்து 316 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மேலும், ஹமீர்பூரில் 51 பேரும், சம்பாவில் மூன்று பேரும் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாநிலம் முழுவதும் தற்போது சுமார் 406 சாலைகள் மூடப்பட்டுள்ளன, அவற்றில் 248 சாலைகள் மண்டியை சேர்ந்தவை. மண்டியில் மின்சாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது, 994 மின்மாற்றிகள் துண்டிக்கப்பட்டுள்ளன என மாநில அரசு தெரிவித்தது. காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீட்கவும் மீட்புக் குழுக்கள் மற்றும் காவல்துறை 24 மணி நேரமும் பணியாற்றி வருவதாக மண்டி துணை ஆணையர் அபூர்வ் தேவ்கன் தெரிவித்தார். ஜூன் 20-ம் தேதி பருவமழை தொடங்கியதிலிருந்து இமாச்சல் பிரதேசம் ரூ.500 கோடி இழப்பைச் சந்தித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்று அம்மாநில முதல்வர் சுக்விந்தர் சிங் சுக்கு தெரிவித்தார்.

### 5 ஆண்டுகளும் நான்தான் முதல்வர்:

# சித்தராமையா திட்டவட்டம்

பெங்களூரு, ஜூலை 03
கர்நாடக முதலமைச்சராக 5 ஆண்டு பதவிக் காலத்தை நிறைவு செய்வேன் என்று சித்தராமையா உறுதியாக தெரிவித்தார்.

கர்நாடக முதல்வர் பதவியிலிருந்து சித்தராமையாவை மாற்றிவிட்டு, டி.கே.சிவகுமார் முதல்வராக பதவியேற்பார் என கடந்த சில வாரங்களாக பலமான விவாதங்கள் எழுந்தன. சிவக்குமாருக்கு ஆதரவாக பல எம்.எல்.ஏக்களும் குரல் எழுப்பினர். இந்த நிலையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த சித்தராமையா, "நான் ஐந்து ஆண்டுகள் முதல்வராக இருப்பேன். உங்களுக்கு இதில் ஏதேனும் சந்தேகம் இருக்கிறதா?" என்று கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த துணை முதல்வர் டி.கே.சிவகுமார், "நான் அவருக்கு ஆதரவாக நிற்க வேண்டும், நான் அவரை ஆதரிக்க வேண்டும். கட்சியின் தலைமை என்ன சொன்னாலும் நான் அதைச் செய்ய வேண்டும். இதைத்தவிர எனக்கு வேறு என்ன வழி இருக்கிறது " என்றார்.

கர்நாடகாவில் தலைமை மாற்றம் குறித்த அரசியல் உரையாடல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக இவர்களின் கருத்துகள் அமைந்துள்ளன. முன்னதாக, நேற்று கர்நாடகாவில் எந்த தலைமை மாற்றமும் நடைபெறவில்லை என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் ரன்தீப் சுர்ஜேவாலா தெளிவுபடுத்தியது குறிப்பிடத்தக்கது.

### மத நம்பிக்கையில் தலையிட முடியாது:

# கண்டதேவி தேரோட்ட வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் கருத்து

மதுரை, ஜூலை 03-
ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு பழக்க வழக்கம், மத நம்பிக்கை உள்ளது. இதில் உடனடியாக நீதிமன்றம் தலையிட்டு எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது என கண்டதேவி கோயில் தேரோட்ட வழக்கில் உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

சிவகங்கை மாவட்டம் கண்டதேவியைச் சேர்ந்த கேசவமணி, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், "கண்டதேவி ஸ்ரீ சொர்ண மூர்த்தீஸ்வரர் திருக்கோயில் சிவகங்கை தேவஸ்தானம் மற்றும் இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இந்தக்கோயிலில் யாருக்கும் முதல் மரியாதை வழங்கக்கூடாது என்றும், அனைத்து சமூக மக்களையும் இணைந்து அவர்கள் பங்களிப்புடன் திருவிழா நடத்த வேண்டும் என 2014-ல் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த ஆண்டு கண்டதேவி தேரோட்டத்தின் போது அனைத்து சமூக மக்களும் தேரின் வடத்தை பிடித்து இழுக்க டோக்கன் வழங்கப்பட்டது. இருப்பினும் முதல் மரியாதை பெறும் நோக்கத்தில் சிலர் அவர்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களை அதிகளவில் அழைத்துச் சென்று தேரின் வடத்தை பிடித்ததால் பிற சமூக மக்கள் தேரின் வடத்தை பிடித்து இழுக்க முடியாத சூழல் ஏற்பட்டு சட்டம் ஒழுங்கு பிரச்சினை உருவானது.

இந்த ஆண்டு ஜூலை 8-ல் கண்டதேவி தேரோட்டம் நடைபெறுகிறது. அப்போது பட்டியல் சமூகத்தினர் தேரின் வடத்தை பிடித்து இழுப்பதற்கு வசதியாக யாருக்கும் முதல் மரியாதை வழங்கக்கூடாது என அதிகாரிகளிடம் மனு அளித்தோம். இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே கண்டதேவி கோயில் தேரோட்டத்தில் யாருக்கும் முதல் மரியாதை வழங்கக்கூடாது என உத்தரவிட வேண்டும்," என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.


இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், மரிய கிளாட் அமர்வில் நேற்று (ஜூலை 2) விசாரணைக்கு வந்தது. அப்போது இந்து சமய அறநிலையத் துறை சார்பில், "ஏற்கெனவே உள்ள உத்தரவுப்படி கடந்த ஆண்டு முறைப்படி மரியாதை செலுத்தப்பட்டது. கோயில் தேரோட்டத்தில் எந்த பாகுபாடும் இல்லாமல் பங்கேற்றனர். இந்த ஆண்டும் அதேபோல் தோரோட்டம் நடைபெறும்," என தெரிவிக்கப்பட்டது.

அப்போது மனுதாரர்கள் தரப்பில், "இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான கோயிலில், யாருக்கும் முதல் மரியாதை வழங்கப்படக் கூடாது. தேரோட்டதில் பட்டியலின மக்களை பங்கேற்க விடாமல் தடுக்கின்றனர்." என வாதிடப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், "சாதி பாகுபாடு இருந்தால், உரிய அமைப்பிடம் அதிகாரிகளிடம் சென்று முறையிட்டு நிவாரணம் பெறலாம். ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு பழக்க வழக்கம் உள்ளது. மத நம்பிக்கை உள்ளது. இதில் உடனடியாக நீதிமன்றம் தலையிட்டு எந்த உத்தரவும் பிறப்பிக்க இயலாது. மேலும், இது குறித்த வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரணையில் இருப்பதால் தற்போது நீதிமன்றம் எந்த உத்தரவும் பிறப்பிக்க இயலாது என கருத்து தெரிவித்து வழக்கை முடித்துவைத்தனர்.

# புதிய வாரிசை அறிவிக்க தலாய் லாமா மறுப்பு..?

## தேர்ந்தெடுக்க அறக்கட்டளைக்கு அதிகாரம்



கான்பெரா, ஜூலை 03-
தற்போதைய 14வது தலாய் லாமா, புதிய வாரிசை அறிவிக்க மறுத்துவிட்டார். புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க திபெத் அறக்கட்டளைக்கு அதிகாரம் அளித்தார்.

நம் அண்டை நாடான திபெத், 1959ம் ஆண்டு முதல், சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. புத்த மத தலைவரான தலாய்லாமா தான் இந்த நாட்டின் ஆட்சியாளர். ஆனால் சீனாவின் அச்சுறுத்தல் காரணமாக, தற்போதைய தலாய் லாமா, சிறுவயதாக இருந்த போதே இந்தியாவில் அரசியல் தஞ்சம் புகுந்து விட்டார்.

அவருடன் வந்த லட்சக்கணக்கான திபெத் மக்கள், இந்தியாவில் வசிக்கின்றனர். இவர்கள், திபெத் மீதான சீனாவின் ஆட்சியை ஏற்பதில்லை. தங்களுக்கென நாடு கடந்த திபெத் அரசாங்கத்தை அமைத்து நிர்வாகம் செய்து வருகின்றனர். தற்போது மத தலைவராக இருக்கும் தலாய் லாமா, 14வது தலாய்லாமா ஆவார்.

இவர் இந்த மாதம் வாரிசை அறிவிக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், நேற்று (ஜூலை 02) அவர் வாரிசை தேர்வு செய்ய மறுப்பு தெரிவித்தார்.

அவர் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க திபெத் அறக்கட்டளைக்கு அதிகாரம் அளித்தார். இது குறித்து தலாய் லாமா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடந்த 2011ம் ஆண்டு செப்டம்பர் 24ம் தேதியே புதிய தலாய் லாமாவை அங்கீகரிப்பதற்கான நடைமுறை குறித்துத் தெளிவாக விளக்கி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. புதிய தலாய் லாமாவை தேர்வு செய்யும் பொறுப்பு, தலாய் லாமாவின் அலுவலகமான கடென் போட்ராங் அறக்கட்டளையின் உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

அவர்கள் திபெத்திய புத்த மரபுகளின் பல்வேறு தலைவர்களை சந்தித்து கலந்து ஆலோசிக்க வேண்டும். யாருக்கும் அதிகாரம் இல்லை எதிர்கால மறுபிறப்பை அங்கீகரிக்கும் முழு அதிகாரம் கடென் போட்ராங் அறக்கட்டளைக்கு மட்டுமே உள்ளது. இந்த விஷயத்தில் தலையிட வேறு யாருக்கும் எந்த அதிகாரமும் இல்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# திடீர் மாரடைப்பு மரணங்களுக்கு கோவிட் தடுப்பூசி காரணமில்லை

## மத்திய சுகாதார அமைச்சகம் விளக்கம்

புதுடெல்லி, ஜூலை 03-
கோவிட்-19 தடுப்பூசிகளுக்கும், மாரடைப்பு காரணமாக ஏற்படும் திடீர் மரணங்களின் அதிகரிப்புக்கும் இடையே எந்த தொடர்பும் இல்லை என்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் தெரிவித்துள்ளது. கோவிட் தொற்றுக்குப் பிறகு ஏற்படும் திடீர் மரணங்கள் குறித்து இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR) மற்றும் அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் நடத்திய விரிவான ஆய்வுகளை மேற்கோள்காட்டி மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் விரிவான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், "கோவிட்-க்குப் பிறகு ஏற்படும் திடீர் மரணங்கள் குறித்து இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் எய்ம்ஸ் ஆகியவற்றின் விரிவான ஆய்வுகள், கோவிட் 19 தடுப்பூசிகளுக்கும், திடீர் மரணங்களுக்கும் இடையே எந்த தொடர்பும் இல்லை என்பதை உறுதியாக நிரூபித்துள்ளன. ஐ.சி.எம்.ஆர். மற்றும் தேசிய நோய் கட்டுப்பாட்டு மையம் நடத்திய ஆய்வுகள், இந்தியாவில் உள்ள கோவிட்-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை மற்றும் பயனுள்ளவை என்பதை உறுதிப்படுத்தியுள்ளன. இவை மிகவும் அரிதாகவே கடுமையான பக்க விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் தெரியவந்துள்ளது"என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேலும், "மரபியல், வாழ்க்கை முறை, ஏற்கனவே உள்ள உடல்நல பாதிப்புகள் மற்றும் கோவிட்-க்குப் பிந்தைய சிக்கல்கள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் திடீர் மாரடைப்பு உயிரிழப்புகள் ஏற்படலாம். கோவிட் தடுப்பூசியை திடீர் மரணங்களுடன் இணைக்கும் கருத்துகள் தவறானவை. இவற்றுக்கான ஒருமித்த கருத்து கொண்ட ஆதாரங்கள் இல்லை என்பதை அறிவியல் நிபுணர்கள் மீண்டும் உறுதி செய்துள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் கட்சியிலிருந்து நீக்கம்

## அன்புமணி திடீர் நடவடிக்கை



சென்னை, ஜூலை 03-
பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் கட்சியிலிருந்து நீக்கப்படுவதாக பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சேலம் மாநகர் மாவட்டத்தைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சியின் சேலம் மேற்கு சட்டப்பேரவை உறுப்பினர் இரா.அருள் கட்சியின் கட்டுப்பாட்டை மீறும் வகையிலும், கட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையிலும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். அண்மைக்காலங்களில் கட்சித் தலைமை குறித்து செய்தித் தொலைக்காட்சிகள் உள்ளிட்ட முதன்மை ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் அவதூறான விமர்சனங்களை முன்வைத்து வருகிறார்.

இது குறித்து ஆய்வு செய்வதற்காக அமைக்கப் பட்ட ஒழுங்கு நடவடிக்கைக் குழு, இது குறித்து விசாரித்து வந்த நிலையில், கட்சியின் கட்டுப்பாட்டை மீறும் வகையிலான நடவடிக்கைகளுக்காக கட்சித் தலைமையிடம் 12 மணி நேரத்திற்குள் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று இரா.அருளுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆனால், அதை அவர் மதிக்கவில்லை.

அதைத்தொடர்ந்து கட்சித் தலைமைக்கு ஒழுங்கு நடவடிக்கைக்குழு அளித்த பரிந்துரை அறிக்கையின் அடிப்படையில், பாட்டாளி மக்கள் கட்சியின் அமைப்புச் சட்ட விதி 30-ன் படி பாட்டாளி மக்கள் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் நேற்று (02.07.2025) புதன்கிழமை முதல் இரா. அருள் நீக்கப்படுகிறார். பாட்டாளி மக்கள் கட்சியினர் எவரும் அவருடன் எந்த வகையிலும் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இரா. அருள் எம்.எல்.ஏ. "அன்புமணி ராமதாஸ் அதிகாரம் இல்லாதவர். அவர் செயல் தலைவர் மட்டும்தான்.

என்னை நீக்கும் அதிகாரம் ராமதாஸ்க்கு மட்டுமே உள்ளது. ராமதாஸ் ஒருவரை தவிர வேறு யாராலும் என்னை கட்சியில் இருந்து நீக்க முடியாது. ராமதாஸை அன்புமணி நேரில் சந்தித்து பேசி ஒன்று சேர வேண்டும். அப்போதுதான் கட்சி காப்பாற்றப்படும்" எனத் தெரிவித்துள்ளார்.

### காவலாளி அஜித்குமார் மரணம்:

# த.வெ.க. சார்பிலான ஆர்ப்பாட்டம் வரும் 6-ம் தேதிக்கு தள்ளிவைப்பு

சென்னை, ஜூலை 03-
காவலாளி அஜித்குமார் மரணத்திற்கு நீதி கேட்டு சென்னையில் இன்று த.வெ.க. சார்பில் நடைபெற இருந்த ஆர்ப்பாட்டத்திற்கு போலீஸ் அனுமதி மறுத்துள்ள நிலையில், த.வெ.க. ஆர்ப்பாட்டம் வரும் 6ம் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட மடப்புரம் கோவில் காவலர் அஜித்குமார் போலீசார் தாக்கியதில் மரணம் அடைந்தார். தமிழகத்தையே உலுக்கிய இச்சம்பவம் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவத்துக்கு எதிர்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இந்த கொடூர சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து, த.வெ.க. தலைவர் விஜய் அறிக்கை வெளியிட்டு இருந்தார். தொடர்ந்து விஜய் அறிவுறுத்தலின்பேரில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை த.வெ.க. பொதுச் செயலாளர் என்.ஆனந்த் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவலாளி அஜித்குமார் மரணத்திற்கு நீதி கேட்டு தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே இன்று காலை 10 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது என த.வெ.க. தலைவர் விஜய் கூறியிருந்தார். போராட்டத்திற்கு அனுமதி கேட்டு சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் த.வெ.க. சார்பில் மனு முறைப்படி கொடுக்கப்பட்டது. மனுவை பரிசீலித்த போலீசார் இன்று எழும்பூரில் நடைபெற இருந்த போராட்டத்திற்கு அனுமதி மறுத்து வேறு தேதியில் போராட்டம் நடத்த வலியுறுத்தினர். இதைத் தொடர்ந்து, "கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி கோரப்பட்ட இடம் அன்றைய தேதியில் வேறு காரணத்திற்குப் பயன்படுத்தப்பட இருப்பதாகக் கூறி காவல் துறையால் அளிக்கப்பட்ட மாற்று இடத்தில் (சிவானந்தா சாலையில்) வருகிற 6.7.2025, ஞாயிறு அன்று காலை 10 மணிக்குக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது என்பதை நம் கழகத் தலைவரின் ஒப்புதலோடு தெரிவித்துக்கொள்கிறேன் என்று த.வெ.க. பொதுச் செயலாளர் என்.ஆனந்த் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

### 2 மடங்கு கட்டணம் வசூலிக்க

# ஓலா, ஊபர் நிறுவனங்களுக்கு மத்திய அரசு புதிய அனுமதி

புதுடெல்லி, ஜூலை 03-
ஓலா, ஊபர் போன்ற நிறுவனங்கள் பீக் ஹவர்ஸ் நேரங்களில் 2 மடங்கு அதிக கட்டணம் வசூலிக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

ஓலா, ஊபர் உள்ளிட்ட டாக்சி சேவைகள் மற்றும் ராபிடோ உள்ளிட்ட பைக் டாக்சி சேவைகள் பெருநகரங்களில் மக்களால் தினந்தோறும் அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஓலா, ஊபர் போன்ற நிறுவனங்கள் பீக் ஹவர்ஸ் நேரங்களில் 2 மடங்கு அதிக கட்டணம் வசூலிக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. வாடகை வாகன நிறுவனங்களுக்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களை மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் வழங்கியுள்ளது. அதில், ஓலா, ஊபர் நிறுவனங்கள் பீக் ஹவர்ஸ் நேரங்களில் கட்டணம் வசூலிப்பதற்கான உச்சவரம்பு 1.5 மடங்காக இருந்த நிலையில், தற்போது 2 மடங்காக மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

மேலும், சரியான காரணமின்றி பயணம் ரத்து செய்யப்பட்டால், ஓட்டுநர்களிடம் இருந்து வசூலிக்கப்படும் கட்டணத்தில் 10 சதவீத அபராதத்தை, அதிகபட்சமாக ரூ.100 ஆக நிர்ணயிக்க போக்குவரத்து அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. சரியான காரணமின்றி பயணிகள் பயணத்தை ரத்து செய்தாலும் இதே அபராத கட்டணம் விதிக்கப்படும்.

# சீமான் மீதான டி.ஐ.ஜி. வருண்குமார் தொடர்ந்த அவதூறு வழக்கு விசாரணைக்கு ஐகோர்ட் தடை

மதுரை, ஜூலை 03-
சீமான் மீது டி.ஐ.ஜி., வருண்குமார் தொடர்ந்த அவதூறு வழக்கு விசாரணைக்கு மதுரை ஐகோர்ட் இடைக்கால தடை விதித்துள்ளது. நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தூண்டுதல் பேரில் அவரது கட்சியினர் தம் மீதும், தம் குடும்பத்தினருக்கு எதிராகவும் சமூக வலை தளங்களில் அவதூறு கருத்துகள் பதிவிட்டு வந்தனர் என்பது திருச்சி டி.ஐ.ஜி. வருண்குமார் குற்றச்சாட்டு ஆகும். இது தொடர்பாக, சீமானுக்கு எதிராக வருண்குமார் தொடர்ந்த அவதூறு வழக்கு திருச்சி 4வது குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. அண்மையில் இந்த வழக்கில் கோர்ட்டில் சீமான் ஆஜராகி விளக்கம் அளித்து இருந்தார்.

அதே சமயத்தில் சீமான் மீதான அவதூறு வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி மதுரை ஐகோர்ட்டில் நாம் தமிழர் தரப்பில் மனு அளிக்கப்பட்டு இருந்தது. இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம், சீமான் மீதான அவதூறு வழக்கு விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. அடுத்தக் கட்ட விசாரணை ஆக.4ம் தேதி நடைபெறும் என்று கூறி வழக்கை நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



மோடி அரசின் ஜி.எஸ்.டி., வரி சீர் திருத்தம் அல்ல, பொருளாதார அநீதி. ஜி.எஸ்.டி. என்பது ஐக்கிய முற்போக்கு கூட்டணி சிந்தனையில் உதித்தது. மோசமான அமலாக்கம், அரசியல் பாகுபாடு, அதிகாரிகள் அத்துமீறல் ஆகியவற்றால் அந்த வாக்குறுதிக்கு மோடி அரசு துரோகம் செய்து விட்டது.

- ராகுல்காந்தி



தமிழ்நாட்டில் வன்னியர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்குவது குறித்து அரசுக்கு பரிந்துரைக்க தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு வழங்கப்பட்டு, நான்காவது முறையாக நீட்டிக்கப்பட்ட காலக்கெடு வரும் 11-ம் தேதியுடன் நிறைவடையவுள்ளது. இந்நிலையில் 10 நாட்களில் வன்னியர் இடஒதுக்கீட்டை அரசு வழங்க வேண்டும்.

- அன்புமணி



மோடி அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கியுள்ளது. மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. அனைத்து கொள்கைகளும் முதலாளித்துவ நண்பர்களுக்காக மட்டுமே எடுக்கப்பட்டுள்ளன. இதனால் ஏற்படும் இழப்புகளை இன்று நாட்டு மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

- ஜெயராம் ரமேஷ்



கர்நாடகத்தில் தற்போது விவசாய நிலம் 6 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் கபினி அணையில் இருந்து பெறப்படும் உபரி நீரால் பாசன பகுதியில் விவசாயம் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேகதாதுவில் அணை கட்டுவதற்கான அடிப்படை பணிகளை தொடங்கி விட்டோம்.

- டி.கே.சிவக்குமார்



நீலகிரி மாவட்டம் உதகை மாரியம்மன் திருக்கோவிலில் 5 இணைகளுக்கான திருமணத்தினை அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் நடத்தி வைத்து சீர் வரிசை பொருட்களை வழங்கினார். உடன் உதகை மாரியம்மன் திருக்கோயில் செயல் அலுவலர் ஜெகநாதன் உட்பட பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா தலைமையில் நடைபெற்றது. உடன் அரசு கொறடா கா.ராமச்சந்திரன், கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, எம்.எல்.ஏ.க்கள் ஆர்.கணேஷ், பொன்ஜெயசீலன், மற்றும் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கவுர் மாவட்ட வன அலுவலர் (கூடலூர்) வெங்கடேஷ் பிரபு குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா ஆகியோர் உள்ளனர்.

ஈரோடு சோளீஸ்வரர் திருக்கோவிலில்

# 50 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைத்து சீர்வரிசை பொருட்கள்: அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்



ஈரோடு,ஜூலை.03-

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் இந்து சமய அறநிலையத் துறை சார்பில், சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் திருக்கோயில்கள் சார்பில் 32 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து, பெருந்துறை பேருந்து நிலையம் அருகில் உள்ள அருள்மிகு சோளீஸ்வரர் திருக்கோவிலில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி திருக்கோயில்கள் சார்பில் ஈரோடு மண்டலத்தில் 50 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைத்து சீர்வரிசை பொருட்களை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படியும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2025-2026 ஆம் ஆண்டிற்கான அறிவிப்பு எண்.01-இன் படி பொருளாதாரத்தின் பின்தங்கிய ஏழை எளிய பொதுமக்கள் பயனடையும் வகையில் ஒவ்வொரு இணை ஆணையர் மண்டலத்திலும் 50 இணைகள் வீதம் 1,000 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் பொன் தாலி உட்பட ரூ.70,000- மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் வழங்கி திருமண விழா நடத்தப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேலும், கடந்த ஆண்டு 600 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக திருமணம் நடத்திவைக்கப்பட்டது.

இவ்வாண்டு கூடுதலாக 400 இணைகளை சேர்த்து ஒரு மண்டலத்திற்கு 50 இணைகள் வீதம் 1000 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக திருமண விழா நடத்திவைக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டதனைத் தொடர்ந்து ஈரோடு, இணை ஆணையர் மண்டல திருக்கோயில்கள் சார்பாக ஈரோடு மண்டலத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய 50 இணைகளுக்கு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் இணைகளுக்கான மங்கள் நாண் வழங்கி திருமணம் நடத்தி வைத்தார்.

மேலும், திருமணத்தில் ஒவ்வொரு இணைகளுக்கும் 4 கிராம் பொன் தாலி, வெள்ளி மெட்டி, பட்டுப்புடவை, பட்டுவேட்டி, பட்டுத் துண்டு, கட்டில், மெத்தை, பெட்சீட், பாய், தலையணைகள், கைகடிகாரம், பீரோ, வெட்கிரைண்டர், மிக்சி, கேஸ் அடுப்பு, கிச்சன் பொருட்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் என மொத்தம் ரூ.70,000- மதிப்பில் 91 வகையான பொருட்கள் வழங்கினார். மேலும் சுமார் 2,500 நபர்களுக்கு இரண்டு வேளையும் அறுசுவை உணவு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு), ஏ.ஜி.வெங்கடாசலம் (அந்தியூர்), ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வே.செல்வராஜ், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் .என்.சிந்துஜா, இந்து சமய அறநிலையத் துறை இணை இயக்குநர் பரஞ்சோதி, துணை இயக்குநர் மேனகா, பெருந்துறை வட்டாட்சியர் ஜெகநாதன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தனது பெயரில் பணம் கேட்டால் யாரும் அனுப்ப வேண்டாம்: பொதுமக்களுக்கு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வேண்டுகோள்


ஊட்டி, ஜூலை.03-

நீலகிரி கலெக்டர் படத்தை பயன்படுத்தி வாட்ஸ்-அப் மூலம் பணம் மோசடி செய்ய நடைபெற்ற முயற்சி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பணத்துக்காக 'ஹவுஸ் பிரேக்கிங், பீரோ புல்லிங்' போன்ற வீடு புகுந்து கொள்ளையடிக்கும் சம்பவங்கள் குறைந்தாலும், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, டிஜிட்டல் முறையில் பொதுமக்களின் வங்கிப் பணத்தைக் கொள்ளையடிப்பது அதிகரித்து வருகிறது. இதில், பாமரர்கள் முதல் படித்தவர்கள் வரை பலரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு வகையில் மோசடி நடைபெறுவதால், பொதுமக்கள் தொடர்ச்சியாக ஏமாறுகின்றனர்.

அந்த வகையில் நீலகிரி மாவட்ட கலெக்டரின் புகைப்படத்தை வாட்ஸ்-அப்பில் ப்ரொபைல் படமாக வைத்து அதன் மூலம் பணம் மோசடி செய்ய முயற்சி நடைபெற்றது அது குறித்த விவரம் வருமாறு:-

நீலகிரி மாவட்ட கலெக்டராக லட்சுமி பவ்யா தண்ணீரு கடந்த ஓராண்டாக பணியாற்றி வருகிறார். இந்த நிலையில் அவரது புகைப்படத்தை பயன்படுத்தி சில மர்ம நபர்கள் போலி வாட்சப் கணக்கை உருவாக்கியுள்ளனர். இதன் பின்னர் அந்த எண்ணின் மூலம் மாவட்ட கலெக்டரின் தொடர்பில்




உள்ளவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பி பணம் கேட்டுள்ளதாக கூறப்படுகிறது. அந்தக் குறுஞ்செய்தியில் எனது வங்கிக் கணக்கில் பிரச்சினை இருப்பதால் உடனடியாக பணம் அனுப்ப முடியவில்லை, நீங்கள் பணம் அனுப்பி உதவி செய்தால், என் வேலை முடிந்ததும் உங்களுக்கு மீண்டும் பணம் அனுப்புகிறேன் என்று கலெக்டர் கூறுவது போல் இருந்தது. இதனால் சந்தேகம் அடைந்த கலெக்டர் அலுவலக ஊழியர்கள் சிலர் இதுகுறித்து கலெக்டருக்கு தகவல் தெரிவித்தனர்.இதுகுறித்து தகவல் அறிந்த மாவட்ட கலெக்டர் உடனடியாக மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு நிஷாவை தொடர்பு கொண்டு போலி வாட்சப் கணக்கு குறித்து புகார் தெரிவித்துள்ளார். இதையடுத்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு உத்தரவின் பேரில் சைபர் கிரைம் போலீசார் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

முதற்கட்டமாக இந்தப் போலி வாட்ஸ் அப் கணக்கு வியட்நாமில் தொடங்கி இருப்பதாகவும் வெர்ச்சுவல் நம்பர் முறையில் தொடங்கி உள்ளதாகவும், இந்த மோசடி பாஸ் கிரைம் என்பதும் தெரிய வந்துள்ளது. அதாவது தனக்கு கீழ் பணியாற்றுபவர்களுக்கு போலியாக படத்தை வைத்து பணம் மோசடி செய்யும் முயற்சி ஆகும்.இது குறித்து இன்ஸ்பெக்டர் பிரவீனா தேவி தலைமையிலான சைபர் கிரைம் போலீசார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். இது போன்று ஏற்கனவே பல மாவட்ட கலெக்டர்களின் புகைப்படங்களை பயன்படுத்தி போலி வாட்ஸ் அப் கணக்குகளை உருவாக்கி பணம் பறிக்க முயற்சி நடைபெற்ற நிலையில் தற்போது நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு புகைப்படத்துடன் போலி வாட்சப் கணக்கு உருவாக்கி மோசடி செய்ய முயற்சி செய்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.இதனிடையே தனது பெயரில் பணம் கேட்டால் யாரும் அனுப்ப வேண்டாம் என மாவட்ட கலெக்டர் வாட்ஸ் அப்பில் ஸ்டேட்டஸ் ஆக வைத்து உள்ளார்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் சிவாக்கர யோகிகள் திருஞானசம்பந்தர் திருமடத்தில் நேற்று ஸ்ரீ சிவகாமி அம்மை உடனமர் ஸ்ரீமத் ஆனந்த நடராஜ பெருமானுக்கு ஆனி திருமஞ்சன மகா அபிஷேகம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர சுவாமிகள் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்த மகா அபிஷேகத்தில் தமிழ்நாட்டில் உள்ள அடியார் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



நீலகிரி மாவட்டம், உதகையில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ், புதியதாக கட்டப்பட்டு வரும் நகராட்சி மார்க்கெட் கட்டுமானப் பணிகளை கலெக்டர்லட்சுமிபவ்யாதண்ணீரு நேரில்பார்வையிட்டுஆய்வுமேற்கொண்டார். உடன் உதகை நகராட்சி ஆணையாளர் (பொ) வினோத், நகராட்சிப் பொறியாளர் சேகரன், உதகை வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், உதகை வட்டாட்சியர் சங்கர் கணேஷ் உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோடு ஏர் ரைபில் பெஞ்ச் ரெஸ்ட் சங்கம் சார்பில் துப்பாக்கி சுடும் பயிற்சி முகாம்



ஈரோடு ஜூலை 3-

ஈரோடு ஏர் ரைப்பில் பெஞ்ச் ரெஸ்ட் சங்கம் முதல்முறையாக திண்டல் வேளாளர் பொறியியல் கல்லூரி மற்றும் டெக்னாலஜி விளையாட்டு மைதானத்தில் முதல் நாளில்28.6 2025 அன்று துப்பாக்கி சுடும் பயிற்சி முகாம் மற்றும் இரண்டாம் நாள் 29 6 2025 பெஞ்ச்ரெஸ்ட் துப்பாக்கி சுடும் போட்டிகள் நடந்தன இவ்விழா எம் எல் ஏ சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது. கொங்குநாடு மக்கள் கட்சியின் இளைஞர் அணி பொதுச் செயலாளர் சூரியமூர்த்தி மற்றும் பெருந்துறை அரசு தரப்பு வழக்கறிஞர் திருமலை முன்னிலை வகித்தனர். ஈரோடு சட்டக் கல்லூரியின் இணை செயலாளர் அருண்பாலாஜி துவக்கி வைத்தார்.சென்னை .ஈரோடு. கோயம்புத்தூர். தர்மபுரி. மதுரை கரூர். திருச்சி என பல மாவட்டங்களில் இருந்து துப்பாக்கி சுடும் வீரர்கள் கலந்து கொண்டனர் இதன் வயது பிரிவு 10.14.17.19. மேலும்34.45 வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்கேற்றனர் இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் பதக்கங்கள் தந்து கௌரவித்தனர்.

இதில் மற்றும் ஈரோடு மாவட்ட ஏர் ரைபிள் பெஞ்சு ரெஸ்ட் சங்க முக்கிய உறுப்பினர்கள் டாக்டர் ஐயப்பன். டாக்டர் குமாரசாமி. டாக்டர் சீனிவாசன். டாக்டர் கிருஷ்ணமூர்த்தி. அரச்சலூர் மகேஷ். .மனோகரன். டாக்டர் பிரகாஷ். மோகன். பழனி ஆண்டவர் கன்சல்டன்சி தினேஷ். வினோத். மொபைல் பார்க் பரணி.டிட்டோபாபு. சௌத்ரி. பிரனேஷ். பெஞ்ச்ரெஸ்ட் மாநில துணைத் தலைவர் திரு ராஜா ஆகியோர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியினை சிறப்பான முறையில் ஈரோடு மாவட்ட ஏர் ரைபிள் பெஞ்ச்ரெஸ்ட் சங்க தலைவரும் உடற்கல்வி இயக்குனருமான திரு தேவகாந்தன் மற்றும் பொதுச் செயலாளர் மணிகண்டன் ஆகியோர் நடத்தினர்.

# சாகர் சர்வதேச பள்ளி மாணவர் பேரவை பதவியேற்பு விழா

ஈரோடு ஜூலை 3-

சாகர் சர்வதேசப்பள்ளியில்2025 – 26 ஆம்ஆண்டிற்கான மாணவர் பேரவைப்பதவியேற்பு விழா நடைபெற்றது. விழாவிற்குசாகர்ஸ்போர்ட்ஸ் அகாடமியின்சிறப்புபயிற்சியாளர் இராமன்விஜயன்சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டார்.மேலும்பள்ளியின்தாளாளர்அரிமா.சி.சௌந்திரராஜன், முதல்வர் .சீஜா, ஆசிரியர்கள், மாணவர்கள்மற்றும் பெற்றோர்கள்ஆகியோர்திரளாகக்கலந்துகொண்டனர்.மாணவர் பேரவையின்தலைவி, செல்வி. ரம்யரூபா. வரவேற்றார் மாணவர் பேரவையின் தலைவர்மற்றும்தலைவி, விளையாட்டுஅணிகளின்தலைவர்மற்றும்உபதலைவர்கள்ஆகியோருக்குப்பள்ளியின் தாளாளர், பள்ளி முதல்வர் மற்றும்சிறப்புவிருந்தினர்ஆகியோர்பதவிப்பிரமானம்செய்துவைத்தனர்..இதில்தலைவர்களுக்கானஅடையாளவில்லைகளும் (Badges) கொடிகளும்வழங்கப்பட்டது. சிறப்புவிருந்தினர் பள்ளியின்தாளாளர் அரிமா.சி.சௌந்திரராஜன் , பேரவையின்தலைவர்களுக்கும்உறுப்பினர்களுக்கும்வாழ்த்துகள்கூறினார். பள்ளியின்முன்னாள்மாணவர்தலைவி. மித்ராநன்றிகூறினர்



தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



ஈரோடு மாவட்டம் வில்லசரம்பட்டி ஊராட்சி ஒண்டிகாரன்பாளையம் கிராமத்தில் தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் 7-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெற்ற போது எடுத்த புகைப்படம். இந்நிகழ்வின் போது மண்டல இணை இயக்குநர் மரு.எஸ்.பாஸ்கர், துணை இயக்குநர் மரு.பிரிசில்லா மாலினி நிக்கல்சன் உட்பட துறை சார்ந்த மருத்துவர்கள் உடனிருந்தார்கள்.

மழைநீர் உயிர்நீர்

# தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் வருகின்ற டிசம்பருக்குள் 7,212 அடுக்குமாடி குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்

**சென்னை,ஜூலை.03**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையில் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமான பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது.



இக்கூட்டத்தில், மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் தெரிவிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க வாரியத்தின் மூலம் கடந்த 30 - 40 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளின் தரத்தினை கண்டறிய வல்லுநர் குழு நியமிக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரையின் படி மறுகட்டுமான திட்டத்தின் கீழ் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள பழைய அடுக்குமாடி குடியிருப்புகள் இடிக்கப்பட்டு புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

அதன்படி சென்னையில் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் ராஜாதோட்டம், வேம்புலி அம்மன் கோயில் தெரு, சுபேதார் கார்டன், டாக்டர் தாமஸ் சாலை, வன்னியபுரம், எம்.எஸ் நகர், திருவெற்றியூர் கிராம சாலை, காக்ஸ் நகர், செட்டித் தோட்டம், அப்பாவு நகர் சுப்புபிள்ளை தோட்டம், கொய்யா தோப்பு, பெரிய பாளையத்து அம்மன் கோயில், கோட்டூர்புரம், என் என் நகர் சிந்தாதிரி பேட்டை, காந்தி நகர், நாட்டான் தோட்டம், கங்கைகரைபுரம், ஆகிய 17 திட்டப்பகுதிகளும் புறநகர் பகுதியில் திருநெல்வேலி மாவட்டத்தில் டாக்டர் அம்பேத்கர் நகர், கரூர் மாவட்டத்தில் குழந்தை கவுன்டன்பாளையம் மற்றும் மதுரை மாவட்டத்தில் சுப்ரமணியபுரம் ஆகிய 3 திட்டப்பகுதிகளும் ஆக மொத்தம் 20 திட்டப்பகுதிகளில் ரூ.1223.62 கோடி மதிப்பீட்டில் 7212 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிமுடிக்கப்பட்டு ஜூலை 2025 முதல் டிசம்பர் 2025 க்குள் படிப்படியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி. சிங் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை இணைச் செயலாளர் கே.எம். சரயு வாரிய செய லாளர்நா.கா ளி தாஸ், தலைமை பொறியாளர் கள்வி. எஸ். கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னைபெருநகர்வளர்ச்சிக்குழுமத்தின்நிதிபங்களிப்பில்நடைபெற்றுவரும்வடசென்னை வளர்ச்சி திட்ட பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடந்தது. இதில் மேயர் ஆர்.பிரியா, துணை ஆணையர்கள் வி.சிவகிருஷ்ண மூர்த்தி, கட்டா ரவி தேஜா, எச்.ஆர். கவுசிக் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் அருவிகளில் கொட்டும் தண்ணீரில் சுற்றுலா பயணிகள் ஆனந்தமாக குளித்து மகிழும் காட்சி.

# ஈரோடு மாவட்டத்தில் தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் 7-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தொடக்கம்

ஈரோடு,ஜூலை.03-

ஈரோடு மாவட்டம் வில்லசரம்பட்டி ஊராட்சி, ஒண்டிகாரன்பாளையம் கிராமத்தில் தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ், ஏழாவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் ஏழாவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி பணி (02.07.2025) இன்று முதல் (31.07.2025) வரை மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் இலவசமாக போடப்படவுள்ளது. இப்பணிக்காக 114 குழுக்கள் அமைக்கப்பட்டு இக்குழுவில் கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர், கால்நடை பராமரிப்பு உதவியாளர் அடங்கிய பணியாளர்கள் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. இம்முகாமில் 4 மாத கன்றுகள் முதல் அனைத்து வயதுடைய பசு மற்றும் எருமை இனங்களுக்கு தடுப்பூசி போடப்பட உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள 20 கால்நடை மருந்தகத்தில் உள்ள ILR குளிர்சாதன பெட்டிகளில் 3,05,200 தடுப்பூசி டோஸ்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இத்தடுப்பூசி பணிக்கான சிரிஞ்சு மற்றும் ஊசிகள் தேவையான அளவில் இருப்பு அனைத்து கால்நடை மருந்தகங்களிலும் வைக்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் ஒண்டிகாரன்பாளையத்தில் நடைபெற்ற முகாமில் 200 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இம்முகாமில் மண்டல இணை இயக்குநர் மரு.எஸ்.பாஸ்கர், துணை இயக்குநர் மரு.பிரிசில்லா மாலினி நிக்கல்சன், உதவி இயக்குநர்கள் மரு.ஆர்.கண்ணன், மரு.ஆர்.எத்திராஜன், மரு.பி.அய்யாசாமி, மரு.எஸ்.சக்திவேல் மற்றும் கால்நடை மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

# முதலீட்டு மோசடியில் பாதிக்கப்பட்ட 8 பேரை வெற்றிகரமாக அடையாளம் கண்டு பிடித்துள்ள தமிழக இணையவழி குற்ற பிரிவு

**சென்னை,ஜூலை.03**

தமிழ்நாட்டின் இணைய வழி குற்றப் பிரிவு தலைமையகத்தில் உள்ள மாநில இணையவழி கட்டுப்பாட்டு மையம், முதலீட்டு மோசடி தொடர்பான விசாரணையில், சீனாவுடன் தொடர்புடைய முதலீட்டு மோசடியில் பாதிக்கப்பட்ட 8 பேரை வெற்றிகரமாக அடையாளம் கண்டு பிடித்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் ஆந்திராவைச் சேர்ந்த இருவர், மகாராஷ்டிராவைச் சேர்ந்த இருவர் மற்றும் ராஜஸ்தான், டெல்லி, ஜம்மு-காஷ்மீர் மற்றும் உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த தலா ஒருவர் அடங்குவர். அந்தந்த மாநில சைபர் போலீஸ் பிரிவுகள் எச்சரிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மோசடியாளர்களால் மேலும் நிதி சுரண்டப்படுவதைத் தடுத்து நிறுத்தியுள்ளது.

மாநில இணையவழி குற்ற கட்டுப்பாட்டு மையம் பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பான விசாரணையின் போது, தரவு பகுப்பாய்வு மற்றும் காவல் கண்காணிப்பாளர், இணையவழி குற்றப் பிரிவு, திருமதி. ஷாஹனாஸ் இலியாஸ், இ. கா. ப., தலைமையிலான புலனாய்வு நடவடிக்கை, சீன மோசடியாளர்களின் கட்டுபாட்டின் கீழ் செயல்படும் போலி வங்கிக் கணக்குகளை அடையாளம் காண முடிந்தது. தமிழ்நாடு இணையவழி குற்றப்பிரிவு உடனடியாக பல வங்கிகளின் மோசடி இடர் மேலாண்மைக் குழுவைத் தொடர்புகொண்டு சந்தேகத்திற்கிடமான கணக்குகள் கண்காணிப்பில் வைக்கப்பட்டன.

சைபர் மோசடி கும்பலுடன் தொடர்புடைய சந்தேகத்திற்கிடமான வங்கி நடவடிக்கைகள் குறித்த முழுமையான விசாரணையில் வெளிநாடுகளில் இருந்து அதிக மதிப்புள்ள பணப் பரிவர்த்தனைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த ஆய்வுகளின் மூலம் ஒரு சர்வதேச மோசடி வலையமைப்பு செயல்படுவதை கண்டறிய முடிந்தது. இந்த மோசடி கும்பலின் தாக்கத்தை எடுத்துக்காட்டும் வகையில், தமிழ்நாடு உட்பட பல இந்திய மாநிலங்களில் இருந்து வந்த புகார்களுக்கான தொடர்புகள் இந்த விசாரணையில் தெரியவந்தன. குறிப்பாக, இக்குற்ற புலனாய்வில் மோசடியால் பாதிக்கப்பட்டவர்களாகத் தோன்றும் ஆறு வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்த எட்டு நபர்கள் அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் இதுவரை எதுவும் புகார் அளிக்கவில்லை என்பதைக் கொண்டு அவர்கள் இன்னும் இந்த மோசடியாளர்களின் வலையில் சிக்கியுள்ளனர் என்பது கண்டு பிடிக்கப்பட்டது. மகாராஷ்டிரா, ராஜஸ்தான், டெல்லி, ஜம்மு-காஷ்மீர் மற்றும் உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த எட்டு நபர்களை அடையாளம் காண இந்த ஆய்வு வழிவகுத்தது.

தமிழ்நாடு இணையவழி குற்றப் பிரிவுவிரைந்து செயல்பட்டு, இந்த மாநிலங்களின் மாநில இணையவழி குற்ற பிரிவை தொடர்பு கொண்டு தகவல் பகிர்ந்தது. இந்த மாநில காவல்துறை அதிகாரிகள் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட எட்டு நபர்களும் மோசடியாளர்களின் பிடியில் இருப்பதை உறுதிப்படுத்தினர். தமிழ்நாடு காவல்துறையின் இந்த தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மாநில இணையவழி குற்றப் பிரிவினர் வழக்குகள் பதிவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு இணைய குற்றப் பிரிவின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகளை முடக்கியதன் மூலம் சர்வதேச இணையக் குற்றவாளிகளின் கைகளில் பெரும் தொகை செல்வதைத் தடுக்க முடிந்தது. மேலும், எச்சரிக்காமல் விடப்பட்டிருந்தால், பாதிக்கப்பட்டவர்கள் போலி முதலீட்டு இணையதளத்தில் மேலும் முதலீடு செய்து அதிக நிதி இழப்புக்கு ஆளாக்கப்பட்டிருப்பார்கள்.

காவல்துறை இயக்குநர், காவல் படைத் தலைவர் சங்கர் ஜிவால், இந்த குற்ற வலையமைப்பைக் கண்டுபிடித்து பாதிக்கப்பட்டவரை மீட்டதில் ஈடுபட்ட விசாரணைக் குழுவைப் பாராட்டினார். இணையவழி குற்றப் பிரிவின் கூடுதல் காவல்துறை இயக்குநர் டாக்டர் சந்தீப் மிட்டல் இது மாதிரியான குற்றங்கள் குறித்து பொதுமக்களை எச்சரித்து பின்வரும் ஆலோசனைகளை வழங்கினார்.

# சனாதன் டெக்ஸ்டைல்ஸ் கட்டமைப்பில் மட்டும் முதலீடு செய்யவில்லை தொழில்துறை மாநாட்டில் செயல் இயக்குனர் சமீர் தத்தானி பேச்சு

**கோவை ஜூலை.03-**

நாங்கள் கட்டமைப்புகளில் மட்டும் முதலீடு செய்யாமல் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கும் முதலீடு செய்கிறோம் என்று கோவையில் நடைபெற்ற 3வதுசெயற்கை இழை உற்பத்தி மாநாட்டில் சனாதன் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் செயல் இயக்குனர் சமீர் தத்தானி பேசினார்.இந்த மாநாட்டில் அவர் செயற்கை இழை உற்பத்தி முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் அதில் உள்ள சவால்கள் குறித்து பேசுகையில்,பேஷன், தளபாடங்கள், ஆட்டோமொடிவ் மற்றும் ஆக்டிவ்வேர் பிரிவுகளில் இதன் தேவை அதிகரித்து உள்ள போதிலும், இந்தியாவின் உற்பத்தி திறன் இன்னும் உலகளாவிய அளவுகோல்களை விட பின்தங்கியுள்ளது. இது விரிவாக்கம் மற்றும் புதுமைக்கான ஒரு கட்டாய தேவையாகும்.உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும், முதலீடுகளை ஈர்க்கவும், போட்டித்தன்மையை அதிகரிக்கவும் மத்திய அரசின் திட்டங்கள் ஆதரவாக உள்ள போதிலும், உயர்தர மூலப்பொருட்கள் கிடைப்பது மற்றும் தொழில்நுட்ப இடைவெளிகள் போன்ற வினியோகக் கட்டுப்பாடுகள் இந்த துறையின் விரைவான வளர்ச்சிக்கு தடையாக இருந்து வருகிறது என்றார்.மேலும் சமீர் தத்தானி பேசுகையில், சனாதன் டெக்ஸ்டைல்ஸ் பஞ்சாப் மாநிலம் வஜிராபாத்தில் 100 ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் ஒரு புதிய கிரீன்பீல்ட் தொழிற்சாலையை அமைத்து வருகிறது.இந்த ஆலை செயற்கை இழை உற்பத்தியை கணிசமாக அதிகரிக்கும் அதேவேளையில்வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும், மேலும் இந்தியாவின் வடக்கு பகுதியில் எங்கள் வர்த்தக செயல்பாடுகள் மேம்படும். அத்துடன் இந்த தொழிற்சாலை பிராந்திய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதோடுசுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத தொழிற்சாலையாகவும் செயல்படும். புதுமையான தயாரிப்புகளைப் பொறுத்தவரை எங்கள் நிறுவனம், மறுசுழற்சி செய்யப்பட்ட பெட்பாட்டில்களிலிருந்து தயாரிக்கப்படும் சனாதன் ரெவிரோ; மேம்பட்ட நீட்சி மற்றும் வடிவமைப்பு நெகிழ்வுத்தன்மையை வழங்கும் சிடிபிநூல்கள்; மற்றும் தீவிர சாயமிடுதலின் தேவையை நீக்கும் பார்ன் சாயமிடப்பட்ட நூல்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்து வருகிறதுஉள்ளது என்று தெரிவித்தார்.

# போதைப்பொருள் தடுப்பு பணியில் சிறப்பாக செயல்பட்ட அதிகாரிகள்,குழுவினருக்கு கமிஷனர் அருண் பாராட்டு

**சென்னை ஜூலை 03-**

கடந்த 4ம் தேதி ஏஎன்ஐயூ போதை பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு, காவல் உதவி ஆணையர் மனோஜ்குமார் தலைமையிலான போலீசார் ஆர்.கே நகர் காவல் போலீசாருடன் ஒருங்கிணைந்து, ரயில்வே யார்டு அருகே கண்காணித்து, மெத்தபெட்டமைன் போதைப்பொருளை மறைத்து வைத்திருந்த 6 பேரை கைது செய்தனர்.அவர்களிடமிருந்து ரூ.35 லட்சம் மதிப்புள்ள 700 கிராம் மெத்தம்பெட்டமைன், 1 கைத்துப்பாக்கி, 15 தோட்டாக்கள், 3 ஐபோன் உட்பட 6 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக தலைமறைவாக இருந்த இளையராஜா என்பவரும் கடந்த 5ம் தேதி கைது செய்யப்பட்டார்.இதையடுத்து சிறப்பாக செயல்பட்ட ஏஎன்ஐயூ உதவி ஆணையர் மனோஜ்குமார் மற்றும் காவல் ஆய்வாளர்கள் ஜானி செல்லப்பா, ராஜா சிங், உதவி ஆய்வாளர்கள் பொன் பாண்டியன், ஜெயகுமார், தலைமைக் காவலர்கள் சுந்தரமூர்த்தி, முதல்நிலைக் காவலர் மணிகண்டன், காவலர்கள் ஹரி, சுதாகர், ராஜா, கண்ணன், பெண்காவலர் கோபிகா ஆகியோரை சென்னை பெருநகர காவல் ஆணையர் அருண் நேரில் அழைத்து, வெகுமதி வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியின் போது நுண்ணறிவுப்பிரிவு இணை ஆணையர் தர்மராஜன் மற்றும் துணை ஆணையர் சக்திவேல், மற்றும் பலர் உள்ளனர்.





திருமருகல் அருகே மகாமாரியம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

# சென்னை சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளை கட்டுப்படுத்தும் வகையில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு கால்நடை காப்பகம்

## மாநகராட்சி சார்பில் பணிகள் நடைபெற்று வருகிறது

**சென்னை,ஜூலை.03**

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்.கே.என்.நேரு அவர்களின் வழிகாட்டுதலின்படியும், மேயர் ஆர்.பிரியா ஆலோசனையின்படியும், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக தெருக்கள் மற்றும் சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு கால்நடை காப்பகம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

**காப்பகங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கால்நடை காப்பகங்கள் அமைக்கும் விதமாக, மூலதன நிதியின் கீழ், திருவொற்றியூர்-டி.பி.பி.சாலை, மணலி-செட்டி மேடு பகுதி, மாதவரம்-சி.எம்.டி.ஏ. லாரி முனையம், தண்டையார்பேட்டை-செல்லவாயல், இராயபுரம்-பேசின் பாலச் சாலை மற்றும் மூர் மார்க்கெட் பகுதி, அண்ணாநகர்-செனாய் நகர், தேனாம்பேட்டை-பீட்டர்ஸ் சாலை, கோடம்பாக்கம்-காந்தி நகர், வளசரவாக்கம்-நொளம்பூர், யூனியன் சாலை, ஆலந்தூர்-பி.வி.நகர், பெருங்குடி-வீரபாண்டிய கட்டபொம்மன் குறுக்குத் தெரு மற்றும் தாம்பரம்-வேளச்சேரி பிரதான சாலை, சோழிங்கநல்லூர்-பயோ சி.என்.ஜி. நிலையம் என மொத்தம் ரூ.19.44 கோடி மதிப்பீட்டில் 13 கால்நடை காப்பகங்கள் அமைக்கப்படுகிறது.

**முதல்வர்**

இதில் இராயபுரம் மண்டலம், வார்டு-53க்குட்பட்ட பேசின் பிரிட்ஜ் சாலையில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் 33,139 ச.அ. பரப்பளவில் 18,167 ச.அ. பரப்பளவில் கட்டி முடிக்கப்பட்ட கால்நடை காப்பகம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் 11.06.2025 அன்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த கால்நடை காப்பகமானது பல்வேறு வசதிகளுடன் 240 கால்நடைகளை பராமரிக்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது.

மேலும், இதில் கால்நடை மருத்துவர் அறை, பராமரிப்பாளர் அறை, கட்டுப்பாட்டு அறை, மருந்துகள் வைப்பு அறை, 12 கண்காணிப்புக் கேமராக்கள், மின் வசதி, மின் விசிறி வசதி, தண்ணீர் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு கால்நடைக்கு நாளொன்றுக்கு ரூ.10/- பராமரிப்புக் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கால்நடை காப்பகத்தினை 14,972 ச.அ. பரப்பளவில் விரிவுப்படுத்தி, கூடுதலான கால்நடைகளைப் பராமரிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெரு ந கர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகள் பெரிதும் கட்டுப்படுத்தப்படும்.

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **NARMATHA .K, D/o. R.Kamalakkannan, Aged 23 Years, Permanently Residing at : D.No. 7/7, Thattankuttai, Vaaikkal Medu, Chithode, Erode District, Tamilnadu - 638 102.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**NARMATHA .K**

மாண்பமை குடும்பநல நீதிமன்றம், மன்னார்குடி
**HMOP No. 24/2023**

பிருதிவிராஜா (எ) சங்கர்,
த/பெ. ராஜமாணிக்கம்,
7/4A, 1வது வடக்கு தெரு,
சேரன்குளம், மன்னார்குடி Tk.,
திருவாரூர் மாவட்டம் – வாதி
–எதிர்–
திலகவதி, த/பெ. கோபால்,
க/பெ. சங்கர்,
சிங்கர் சீவிங் மிஷின் டெய்லர், 35,
மிடாஸ் கிளாத் மேனுபேக்சரிங் கம்பெனி
2வது ரெயில்வே கேட், மெயின்ரோடு
NRK புரம், திருப்பூர் – பிரதிவாதி

**அறிவிப்பு**

மேற்கண்ட வழக்கில் தங்களுக்கு நீதிமன்றம் மூலம் பலமுறை சமன் அனுப்பியும் தங்களுக்கு ச்ர்வாகாத காரணத்தால் மேற்படி வழக்கு விசாரணை எதிர்வரும் 18.07.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் தங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ எதிர்வரும் 18.07.2025 அன்று காலை 10 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒரு தலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்ற விவரம் அறியவும்

பிருதிவிராஜா (எ) சங்கர்,
சேரன்குளம், மன்னார்குடி

IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, COONOOR.
O.S. No. 285 of 2024
CANARA BANK,
COONOOR Branch
– Represented by its
Principal officer and Senior Manager
................Plaintiff
Vs.
1. Sindhu Joint Liablity Group rep By its Animator Mrs. V. Vijayalakshmi
And 6 others
............... Defendants
SUMMONS TO THE DEFENDANTS No.5
D5) Mrs.M.Meenakumari
W/o. Mr. Maanbahadur,
Member of Sindhu Joint Liability Group,
Door No.69E, Mount Pleasant,
Coonoor-643 102 ,
in the district of Nilgiris
PLEASE TAKE Summons to you no.5 that the above named Plaintiff has filed Suit under Order-VII Rule-1 of C.P.C. against you all and the case is stands posted on 23-07-2025 at 10.30 a.m. for your appearance in the Court of the of the Honourable Subordinate Judge at Coonoor, in case of your default the matter will be decided exparte.
D. MAVEERCHAND, B.A., LL.B.,
Advocate for the Plaintiff

IN THE COURT OF THE HONOURABLE SUB JUDGE OF NILGIRIS,COONOOR.
O.S.No. 279 / 2024
THE MANAGER,
STATE BANK OF INDIA,
KOTAGIRI BRANCH
--------PETITIONER/ PLAINTIFF
Vs
Mr.V.JAYAGANESH
--------RESPONDENT/ DEFENDANT
SUMMONS TO DEFENDANT
To
Mr.V.Jayaganesh, son of Mr. Venkatesh, a Hindu, aged about 32 years, now residing at No.15/117, Rifle Range, Kodanadu Road, Donnington Post, Kotagiri, The Nilgiris.
Please take notice that the above named Plaintiff has filed the above suit for recovery of money of Rs.4,35,322/- against you before the Honourable Sub Judge of Nilgiris, Coonoor. The suit stands posted on 23.07.2025 at 10: 30 A.M. You are hereby summoned to appear in person or by a pleader on the date and time mentioned above, failing which the case will be decided against you.
ADVOCATE FOR THE PLAINTIFF
L.ASHOKKUMAR. B.A.,LL.B., B.L.I.S.,M.H.R.
K.RAKSHNAPRIYA.BBA.,LL.B.,
ADVOCATES, 27, DONNINGTON ROAD, KOTAGIRI.
COONOOR,
02.07.2025

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தமிழ்நாடு அரசு
**உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி, தூத்துக்குடி மாவட்டம்**
ந.க.எண்.495/2024 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள். 01.07.2025

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சியில் **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2025-26** இன் கீழ், ரூ. 279.00 இலட்சம் மதிப்பீட்டில் உடன்குடி பேரூராட்சி புதிய பேருந்து நிலையம் கட்டுதல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

1) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2) ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :
அ) முன் கலந்தாய்வு கூட்டம் – **09.07.2025** முற்பகல் **11.00** மணி
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் – **16.07.2025** மாலை **3.00** மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் – **17.07.2025** மாலை **3.30** மணி
3) ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.
4) நிர்வாக காரணங்களினால் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டாலோ, காலநீட்டிப்பு செய்யப்பட்டாலோ அதன் விபரங்களை மேற்படி இணையதள முகவரியான https://tntenders.gov.in ல் அறிந்து கொள்ளலாம்.

திருமதி. அ.ஹீமைரா ரமீஸ் பாத்திமா
தலைவர்
உடன்குடி பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்

செ.ம.தொ.இ./ 3389 /ஒப்பந்தப்புள்ளி/2025

திரு. இரா.சுந்தரம்
செயல் அலுவலர்
உடன்குடி பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம், சேலம்

**மின்னணு-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மொத்ததொகை ஒப்பந்த முறை**
**மின்னணு-ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண் 14/2025-2026/க.பொ/க(க&ப)வட்டம். சேலம் / நாள் .01.07.2025**

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம் -7 அவர்களால் பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்க்கண்ட பணிக்கு இணைய வழி மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மின்னணு ஒப்பந்தப்புள்ளியை "https://tntenders.gov.in" என்ற இணையதளத்தில் 03.07.2025 பிற்பகல் 3.00 மணி முதல் 18.07.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" பதிவிறக்கம் செய்த ஒப்பந்தப்புள்ளியை 18.07.2025 பிற்பகல் 3.00 மணிக்குள் இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 18.07.2025 –ல் பிற்பகல் 3.30 மணிக்கு இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" திறக்கப்படும்.

| வ. எண். | பணியின் பெயர் | தோராய மதிப்பீட்டுத் தொகை (GST உட்பட) (ரூபாய் இலட்சத்தில்) | முன்வைப்புத் தொகை (ரூ) | பணி முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| 1. | கிருஷ்ணகிரி மாவட்டம்கிருஷ்ணகிரியில் பதிவுத் துறையின் ஒருங்கிணைந்த அலுவலக புதிய கட்டடத்திற்கு உட்புற மற்றும் வெளிப்புற மின் பணிகள், மின்தூக்கி (Lift) மற்றும் மின்னாக்கி (Generator) அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல் | 88.90 | 54,500 | 150 நாட்கள் |

**ஒப்பந்ததாரர் வகுப்பு :** பொதுப்பணித்துறையில் மின் ஒப்பந்ததாரராக வகுப்பு–IV ல் மாநில அளவில் – இவ்வட்ட அளவில் (ரூ.50.00 இலட்சம் முதல் ரூ.2.00 கோடி வரை) மற்றும் அதற்கு மேல்
**முன் வைப்புத் தொகை செலுத்த வேண்டிய அலுவலர் விவரம் :** முன் வைப்புத் தொகையை இணையதளம் மூலம் மட்டுமே செலுத்தலாம்.
பணியின் பெயர், முன் வைப்புத்தொகை செலுத்த வேண்டிய விவரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை அரசு இணையத்தளத்தில் "https://tntenders.gov.in" தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் மாற்றம் ஏற்படின் அது பற்றிய விவரம் வளைத்தளம் "https://tntenders.gov.in" ல் பதிவேற்றம் செய்யப்படும்.

**கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., சார்பில்**
**கட்டட (க&ப) வட்டம், சேலம்-7.**

செ.ம.தொ.இ./3361/ஒப்பந்தப்புள்ளி/2025

## 2-வது டெஸ்ட் போட்டியில்
# பும்ரா, குல்தீப் நீக்கம் ஏன்? கேப்டன் சுப்மன் கில் பதில்

**பர்மிங்காம், ஜூலை 03-**
இங்கிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியில் பும்ரா, குல்தீப் இடம் பெறாதது குறித்து கேப்டன் சுப்மன் கில் விளக்கமளித்துள்ளார்.

**சுற்றுப்பயணம்...**
இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நடைபெற்றது. இந்த போட்டியில் இங்கிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் தொடங்கி உள்ளது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 0-1 என்ற கணக்கில் பின்தங்கி உள்ளது.

**இங்கி. பந்துவீச்சு...**
இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நேற்று தொடங்கியது. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. தொடர்ந்து




இந்திய அணி பேட்டிங் செய்து வருகிறது. இந்த போட்டிக்கான இந்திய அணியில் 3 மாற்றங்கள் செய்யப்பட்டன. அதன்படி, சாய் சுதர்சன், ஷர்துல் தாக்கூர், ஜஸ்ப்ரீத் பும்ரா நீக்கப்பட்டு அவர்களுக்கு பதிலாக வாஷிங்டன் சுந்தர், ஆகாஷ் தீப், நிதிஷ் குமார் ரெட்டி இடம் பிடித்தனர். இந்த போட்டிக்கான இந்திய அணியில் குல்தீப் யாதவ் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது.. ஆனால் அவருக்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

**இடம் பெறாதது ஏன்?**
இந்நிலையில், இந்த போட்டியில் பும்ரா, குல்தீப் யாதவ் இடம் பெறாதது ஏன் என்பது குறித்து கேப்டன் கில் பதில் அளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, நாங்களும் முதலில் பவுலிங் செய்யவே தீர்மானித்திருப்போம். இந்த பிட்சில் ஏதேனும் சவால் இருந்தால் அது முதல் நாளாக இருக்கும். எங்களுடைய அணியில் 3 மாற்றங்கள் செய்கிறோம். நிதிஷ் ரெட்டி, சுந்தர், ஆகாஷ் தீப் ஆகியோர் வருகிறார்கள். பணிச்சுமையை நிர்வகிக்கும் பொருட்டு பும்ரா விளையாடவில்லை.

**பயன்படுத்துவோம்...**
அடுத்தப் போட்டி லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெறுகிறது. அங்கே அவரை நாங்கள் அதிகம் பயன்படுத்துவோம் என்று நினைக்கிறோம். இந்தப் போட்டிக்கு முன்பாக நல்ல இடைவெளி கிடைத்தது. இது எங்களுக்கு முக்கியமான போட்டி. குல்தீப் யாதவை விளையாட வைக்க ஆர்வமாக இருக்கிறோம். ஆனால் கடந்தப் போட்டியை பார்க்கும் போது எங்களுடைய லோயர் ஆர்டர் நன்றாக விளையாடவில்லை. எனவே பேட்டிங் வரிசையை ஆழப்படுத்த முடிவெடுத்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைந்தது



**ஒகேனக்கல், ஜூலை 03-**
காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை காரணமாக கர்நாடக மாநிலத்தில் உள்ள கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி அணைகள் தனது முழு கொள்ளளவை எட்டியுள்ளது. இதன் காரணமாக 2 அணைகளின் பாதுகாப்பு கருதி அதிகாரிகள் தண்ணீர் காவிரி ஆற்றில் தமிழகத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

இதனிடையே கடந்த 3 நாட்களுக்கு முன் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 50 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இந்த நீர்வரத்து படிப்படியாக அதிகரிக்க தொடங்கியது. அதன்படி நேற்று முன்தினம் காலை வினாடிக்கு 70 ஆயிரம் கனஅடியாக இருந்த நீர்வரத்து பின்னர் மாலையில் வினாடிக்கு 57 ஆயிரம் கனஅடியாக குறைந்தது. தொடர்ந்து, நேற்று காலை 8 மணி நிலவரப்படி ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து வினாடிக்கு 43 ஆயிரம் கனஅடியாக குறைந்தது. ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்தை கர்நாடக-தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். இந்த நீர்வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இந்தியாவுடன் குறைந்த வரியுடன் கூடிய ஒப்பந்தம்: டிரம்ப் தகவல்

**வாஷிங்டன், ஜூலை 03-**
இந்தியா-அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை எட்டி உள்ளது. ஜூலை 9ம் தேதி 90 நாள் வரி நிறுத்தம் முடிவடைவதால், ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் வேகமெடுத்தன. இது குறித்து அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கூறியதாவது: இந்தியாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்யப்போகிறோம் என நினைக்கிறேன்.

அது ஒரு வேறு விதமான ஒப்பந்தமாக இருக்கும். அமெரிக்க நிறுவனங்கள் போட்டியிடுவதற்கு ஏற்ற ஒரு ஒப்பந்தம் அமையும். அது மிகக் குறைந்த வரிகளைக் கொண்டிருக்கும். அந்த ஒப்பந்தம் வாயிலாக நாமும், இந்தியாவில் பொருள் விற்க முடியும். இப்போது இந்தியா யாரையும் பொருள் விற்க அனுமதிப்பதில்லை. இந்தியா அதை செய்யும் என நினைக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார். ஒருவேளை ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால், இந்தியாவின் புதிய பரஸ்பர வரி விகிதம் தற்போதுள்ள 10 சதவீதத்தில் இருந்து 27 சதவீதமாக உயரக்கூடும் என பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர்.

## திருப்புவனம் அஜித்குமார் குடும்பத்தினருக்கு
# த.வெ.க. தலைவர் விஜய் நேரில் ஆறுதல்



**சிவகங்கை, ஜூலை 03-**
போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்ட திருப்புவனம் அஜித்குமார் வீட்டிற்கு தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் நேரில் சென்றார். அஜித்குமாரின் குடும்பத்தினரை சந்தித்து விஜய் ஆறுதல் கூறினார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரம் கோவிலில் காவலாளி அஜித்குமார். இவர் தனது நகைகளை திருடிவிட்டதாக நிகிதா என்ற பெண் போலீசில் புகார் அளித்தார். புகார் தொடர்பாக அஜித்குமாரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையின்போது அஜித்குமாரை போலீசார் கடுமையாக தாக்கினர். இந்த தாக்குதலில் அஜித்குமார் உயிரிழந்தார். இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் தாக்குதல் நடத்திய போலீசார் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், போலீசாரால் அடித்துக்கொல்லப்பட்ட திருப்புவனம் அஜித்குமார் வீட்டிற்கு தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் நேரில் சென்றார். வீட்டில் வைக்கப்பட்டிருந்த அஜித்குமார் புகைப்படத்திற்கு விஜய் மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர், அஜித்குமாரின் குடும்பத்தினரை சந்தித்து விஜய் ஆறுதல் தெரிவித்து ரூ.2 லட்சம் நிவாரணமாக வழங்கினார்.


## குரூப் 4 தேர்வு - ஹால் டிக்கெட் வெளியீடு

**சென்னை, ஜூலை 03-**
குரூப் 4 தேர்வுக்கான ஹால் டிக்கெட்டை டி.என்.பி.எஸ்.சி. வெளியிட்டுள்ளது. www.tnpsc.gov.in என்ற இணையதள முகவரியில் ஹால் டிக்கெட்டை பதிவிறக்கம் செய்யலாம். வரும் 12ம் தேதி எழுத்துத்தேர்வு நடைபெறுகிறது.

கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளுக்கான 3935 காலிப்பணியிடங்களை நிரப்ப குரூப் 4 தேர்வு அறிவிக்கப்பட்டது. தேர்வர்கள் 25.04.2025 முதல் 24.05.2025 வரை தேர்வாணைய இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது.

தமிழக அரசின் இருக்கும் பல்வேறு பதவிகளில் குரூப் 4 தேர்வு அதிக பேர் எழுதும் தேர்வாக உள்ளது. ஒரே கட்ட தேர்வு, 10-ம் வகுப்பு தகுதி போதும் என்பதால் ஒவ்வொரு ஆண்டும் இத்தேர்வை லட்சக்கணக்கில் எழுதி வருகின்றனர்.

## விம்பிள்டன் டென்னிஸ் போட்டி:
# முதல் சுற்றிலேயே வெளியேறிய முன்னணி வீரர், வீராங்கனைகள்





**லண்டன், ஜூலை 03-**
விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் முதல் சுற்றிலேயே ரஷ்யாவின் டேனில் மெத்வதேவ் உள்ளிட்ட முன்னணி வீரர், வீராங்கனைகள் வெளியேறியுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**மெத்வதேவ்...**
கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடந்து வருகிறது. இதில் உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் களமிறங்கி விளையாடி வருகின்றனர். இந்நிலையில், விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் முதல் சுற்றிலேயே முன்னணி வீரர், வீராங்கனைகள் வெளியேறியது ரசிகர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. ரஷ்யாவின் டேனில் மெத்வதேவ், ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வரேவ், நெதர்லாந்தின் கிரீக்ஸ்பூர், இத்தாலியின் மேட்டியோ பிரெட்டேனி, டென்மார்க்கின் ஹோல்ஜர் ரூனே, கிரீசின் சிட்சிபாஸ், இத்தாலியின் லாரென்சோ முசெட்டி உள்ளிட்ட பலர் முதல் சுற்றில் வெளியேறினர்.

**தரவரிசையில்....**
இதேபோல், பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் நம்பர் 2 வீராங்கனையும், சமீபத்தில் நடந்த பிரெஞ்சு ஓபன் போட்டியில் பட்டம் வென்றவரான அமெரிக்காவைச் சேரந்த கோகோ காப் முதல் சுற்றுடன் தொடரில் இருந்து வெளியேறினார். தரவரிசையில் 5-வது இடத்தில் உள்ள சீனாவின் குயின்வென் ஜெங், ஸ்பெயின் வீராங்கனை பவுலா படோசா, அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, துனீசியாவின் ஒன்ஸ் ஜபேர், பெலாரசின் விக்டோரியா அசரென்கா உள்பட பலர் முதல் சுற்றில் தோற்று தொடரில் இருந்து வெளியேறினர்.

**ஜோகோவிச் முன்னற்றம்...**
இதற்கிடையே 24 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற சாதனையாளரும், உலகின் 6-ம் நிலை வீரருமான செர்பியாவின் ஜோகோவிச் முதல் சுற்றில் பிரான்சை சேர்ந்த அலெக்சாண்டர் முல்லரை எதிர்கொண்டார். இதில் ஜோகோவிச் 6-1, 6-7 (7-9), 6-2, 6-2 என்ற செட் கணக்கில் வென்று 2-வது சுற்றுக்கு முன்னேறினார். இந்த வெற்றியைப் பெற அவருக்கு 3 மணி 19 நிமிடங்கள் தேவைப்பட்டது.

## வெய்ன் லார்கின்ஸ் நினைவுதினம்:
# கருப்பு பட்டை அணிந்து விளையாடும் இந்தியா-இங்கிலாந்து அணி வீரர்கள்

**பர்மிங்காம், ஜூலை 03-**
வெய்ன் லார்கின்ஸ் நினைவுதினத்தை முன்னிட்டு 2-வது டெஸ்டி போட்டியிலும் இந்தியா- இங்கிலாந்து அணி வீரர்கள் கருப்பு பட்டை அணிந்து விளையாடி வருகின்றனர்.

**சுற்றுப்பயணம்....**
இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நடைபெற்றது. இந்த போட்டியில் இங்கிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் தொடங்கி உள்ளது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 0-1 என்ற கணக்கில் பின்தங்கி உள்ளது.

**அணியில் மாற்றம்...**
இரு அணிகள் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நேற்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது. இந்திய அணியில் 3 மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பும்ரா, சாய் சுதர்சன், ஷர்துல் தாகூர் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பதிலாக வாஷிங்டன் சுந்தர், நிதிஷ் குமார், ஆகாஷ் தீப் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**கருப்பு பட்டையுடன்...**
இந்நிலையில் இந்த போட்டியில் இரு அணி வீரர்களும் கருப்பு பட்டை அணிந்து விளையாடி வருகின்றனர். இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் வெய்ன் லார்கின்ஸை நினைவுகூரும் விதமாக இரு அணிகளும் கருப்பு கைப்பட்டைகளை அணிந்துள்ளனர். அகமதாபாத் விமான விபத்து காரணமாக முதல் டெஸ்டிலும் இரு அணி வீரர்களும் கருப்பு பட்டை அணிந்து விளையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோகோ காப் வெளியேற்றம்

ஆண்டுதோறும் ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் என 4 வகையான 'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் மிகவும் கவுரவமிக்கதும், முதன்மையானதுமான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற லீக் ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான கோகோ காப் (அமெரிக்கா), உக்ரைனின் தயானா யாஸ்ட்ரெம்ஸ்கா உடன் மோதினார். இந்த ஆட்டத்தில் அனுபவ வீராங்கனையான கோகோ காப் எளிதில் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த ஆட்டத்தில் அபாரமாக செயல்பட்ட தயானா யாஸ்ட்ரெம்ஸ்கா 7-6 (7-3), 6-1 என்ற செட் கணக்கில் கோகோ காப்பை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். முதல் சுற்றிலேயே அதிர்ச்சி தோல்வி கண்ட கோகோ காப் தொடரில் இருந்து வெளியேறினார்.

## இறுதிக்கு முன்னேறிய திருப்பூர்

திண்டுக்கல்லில் நடைபெற்ற குவாலிபையர் 1 சுற்றில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ், திருப்பூர் தமிழன்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற சேப்பாக் அணி பவுலிங் தேர்வு செய்தது. அதன்படி, திருப்பூர் தமிழன்ஸ் அணி முதலில் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்கள் இருவரும் ஆரம்பம் முதலே அதிரடி காட்டினர். பவர்பிளே முடிவில் திருப்பூர் அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 70 ரன்கள் சேர்த்தது. இறுதியில், திருப்பூர் தமிழன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 202 ரன்கள் எடுத்துள்ளது. சேப்பாக் அணி சார்பில் லோகேஷ் ராஜ் 2 விக்கெட்டும், விஜய் சங்கர் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 203 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி களமிறங்கியது. சேப்பாக் அணியின் தொடக்க வீரர்களாக ஆஷிக்- மோகித் ஹரிஹரன் ஆகியோர் களமிறங்கினர். இதில் ஆஷிக் 14 ரன்னில் ஆட்டமிழந்தார். இதனை தொடர்ந்து வந்த வீரர்கள் சொற்ப ரன்னில் ஆட்டமிழந்தனர். இதனால் சேப்பாக் அணி 16.1 ஓவரில் 123 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. எனவே 79 ரன்கள் வித்தியாசத்தில் திருப்பூர் வெற்றி பெற்றது. திருப்பூர் அணி தரப்பில் இசக்கிமுத்து, மதிவாணன் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினர். இந்த வெற்றி மூலம் திருப்பூர் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறி உள்ளது.

## புதிய பெயரில் சாம்பியன்ஸ் லீக்

சாம்பியன்ஸ் லீக் டி20 தொடரின் மறு உருவமாக 'உலக கிளப் சாம்பியன்ஷிப் தொடர்' 2026-ல் தொடங்க உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்தியாவின் ஐபிஎல் தொடர், பாகிஸ்தானின் பிஎஸ்எல், ஆஸ்திரேலியாவின் BBL, தென்னாப்பிரிக்காவின் SA20, இங்கிலாந்தின் தி ஹன்ரட் போன்ற உலகெங்கிலும் உள்ள ஃபிரான்சைஸ் தொடர்களில் பட்டம் வென்ற அணிகளை ஒருங்கிணைத்து பிரமாண்ட தொடராக நடத்தப்படவுள்ளது.

அத்தொடரை உலக கிளப் சாம்பியன்ஷிப் என்ற பெயரில் மீண்டும் துவங்குவதற்கு முயற்சிகள் எடுத்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இது ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. சாம்பியன்ஸ் லீக் டி20 தொடர் ரசிகர்களின் போதிய ஆதரவின்மை மற்றும் ஸ்பான்சர்ஷிப் பிரச்சனைகள் காரணமாக 2015-ம் ஆண்டு நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. 2009 - 2014 வரை நடைபெற்ற அந்தத் தொடரில் சென்னை மற்றும் மும்பை அணிகள் தலா 2 கோப்பைகளை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சிறந்த கிரிக்கெட்டர் யார்..? பட்லர்

இங்கிலாந்து அணியின் முன்னணி வீரரான ஜாஸ் பட்லர் பாட்காஸ்ட் நிகழ்ச்சியில் பங்கேற்றார். அப்போது அவரிடம், இந்திய ஜாம்பவான் சச்சின் தெண்டுல்கர், தென் ஆப்பிரிக்க ஜாம்பவான் ஜாக் காலிஸ் ஆகிய இருவரில் யார் சிறந்த கிரிக்கெட்டர் என கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த பட்லர், நான் காலிஸ் என சொல்லப் போகிறேன்.

காலிஸ் சிறந்த கிரிக்கெட் வீரர் என ரிக்கி பாண்டிங் நேரடியாக சொல்லியிருக்கிறார். அவரது சாதனைகளை ஒன்றாகச் சேர்த்தால் பேட்டிங்கில் சச்சினும், பந்துவீச்சில் ஜாகீர் கானும் விளையாடியதற்கு சமம். நீங்கள் ஒரு அணியைத் தேர்வு செய்ய முயற்சிக்கிறீர்கள் என்றால் அதில் அவரை தாண்டி பார்ப்பது மிகவும் கடினம் என தெரிவித்தார்.

## கவுர் அபார்: இந்தியா வெற்றி

இந்திய மகளிர் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டி20 தொடர், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. முதல் டி20 போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது. இந்நிலையில், இரு அணிகள் மோதும் இரண்டாவது டி20 போட்டி நடந்தது. டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் களமிறங்கிய இந்திய மகளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 184 ரன்கள் குவித்தது.ஜெமிமா ரோட்ரிக்ஸ் அரை சதம் கடந்து 63 ரன்னில் அவுட்டானார்.

அமன்ஜோத் கவுர் பொறுப்புடன் ஆடி அரை சதம் கடந்து 63 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளார். ரிச்சா கோஷ் 32 ரன்னுடன் ஆட்டம் இழக்காமல் உள்ளார். இங்கிலாந்து சார்பில் லாரன் பெல் 2 விக்கெட்டும், லாரன் பைலர் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 185 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது. இந்திய அணியின் அற்புதமான பந்துவீச்சில் சிக்கி முன்னணி வீராங்கனைகள் விரைவில் வெளியேறினர். இறுதியில், இங்கிலாந்து 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 157 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 24 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்று டி20 தொடரில் 2-0 என முன்னிலை வகிக்கிறது. ஆட்ட நாயகி விருது அமன்ஜோத் கவுருக்கு அளிக்கப்பட்டது.

# தமிழகத்தில் 8-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு

**சென்னை, ஜூலை 03-**
தமிழகத்தில் வரும் 8-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வெயிலின் தாக்கம் கடந்த சில நாட்களாக அதிகமாக உள்ள நிலையில், வரும் 8 ஆம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை மையம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தில் வரும் 8-ஆம் தேதி வரை ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும்காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரை, இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 36-37 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்த பட்ச வெப்பநிலை 29 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 36-37 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்த பட்ச வெப்பநிலை 29 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதற்கட்டமாக இம்மாத இறுதிக்குள்
# 3 அப்பாச்சி ஹெலிகாப்டர்களை இந்தியாவுக்கு வழங்கும் அமெரிக்கா

**புதுடெல்லி, ஜூலை 03-**
இரண்டு கட்டங்களாக அமெரிக்கா ஹெலிகாப்டர்களை வழங்க உள்ள நிலையில், முதற்கட்டமாக இந்த மாதத்திற்குள் 3 அப்பாச்சி ஹெலிகாப்டர்களை இந்தியா வரவுள்ளன.

அமெரிக்காவிடம் இருந்து 600 மில்லியன் டாலருக்கு அப்பாச்சி ஏ.ஹெச்.64இ அட்டாக் ஹெலிகாப்டர் வாங்க இந்தியா கடந்த 2020ஆம் ஆண்டு ஒப்பந்தம் போட்டது. கடந்த ஆண்டு மே-ஜூன் மாதங்களில் முதற்கட்டமாக 3 ஹெலிகாப்டர்களை அமெரிக்கா வழங்கும் என இந்தியா எதிர்பார்த்தது. சுமார் ஒரு வருடத்திற்கு மேலாக காலதாமதம் ஆன நிலையில் இந்த மாதத்திற்குள் அப்பாச்சி ஹெலிகாப்டர்களை அமெரிக்கா வழங்கும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இரண்டு கட்டங்களாக அமெரிக்கா ஹெலிகாப்டர்களை வழங்க இருக்கிறது. அதில் முதற்கட்டமாக 3 ஹெலிகாப்டர்கள் இந்தியா வந்தடையும். இந்த ஹெலிகாப்டர்கள் பாகிஸ்தான் எல்லையில் பாதுகாப்பிற்காக குவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த கட்டமாக 3 ஹெலிகாப்டர் இந்த வருட இறுதிக்குள் இந்தியா வந்தடையும்.

# தொடர்ந்து உயரும் தங்கம் விலை

**சென்னை, ஜூலை 03-**
2-வது நாளாக நேற்றும் தங்கம் விலை உயர்ந்து விற்பனையானது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கத்தின் விலை அவ்வப்போது ஏற்ற, இறக்கத்தை சந்தித்து வருகிறது. பெரும்பாலும் தங்கம் விலை உயர்ந்தே காணப்படும். இதனை தொடர்ந்து கடந்த வாரம் தங்கம் விலை சவரனுக்கு 2,440 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ரூ.71,440-க்கும் விற்பனையானது.

இதனை தொடர்ந்து வார தொடக்க நாளான கடந்த 3 நாட்களுக்கு முன் சவரனுக்கு 120 ரூபாய் குறைந்து ஒரு சவரன் 71,320 ரூபாய்க்கு விற்பனையானது. இதையடுத்து மாத தொடக்க நாளான நேற்று தங்கம் விலை சவரனுக்கு 840 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.72,160-க்கு விற்பனையானது. இந்த நிலையில், 2-வது நாளாக நேற்றும் தங்கம் விலை உயர்ந்து விற்பனையானது. கிராமுக்கு 45 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் 9,065 ரூபாய்க்கும் சவரனுக்கு 360 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் 72,520 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி விலையில் மாற்றமில்லை. ஒரு கிராம் வெள்ளி 120 ரூபாய்க்கும், பார் வெள்ளி 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.

# தென் ஆப்பிரிக்க வீரர் விலகல்

தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதில் முதல் போட்டியில் 328 ரன் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்கா அபார வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலையில் உள்ளது. இந்த தொடருக்கான தென் ஆப்பிரிக்க அணியில் சீனியர் வீரர்கள் இடம் பெறவில்லை. இந்த அணியை கேசவ் மகராஜ் வழிநடத்துகிறார்.இரு அணிகளுக்கும் இடையிலான 2வது போட்டியில் வரும் 6ம் தேதி தொடங்குகிறது.

இந்நிலையில், ஜிம்பாப்வேவுக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியில் இருந்து கேசவ் மகராஜ் விலகி உள்ளதாக தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. முதல் போட்டியின் போது ஏற்பட்ட காயம் காரணமாக அவர் விலகி உள்ளதாக கூறப்படுகிறது. அவருக்கு பதிலாக சீனுரான் முத்துசாமி அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், 2வது போட்டிக்கான தென் ஆப்பிரிக்க அணியை வியான் முல்டர் வழிநடத்துவார் எனவும் தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

மரம் மனிதனின் உரம்

# ராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை நோய் தடுப்பு தடுப்பூசி முகாமை கலெக்டர் தொடங்கி வைத்தார்



**ராமநாதபுரம், ஜூலை 03-**
ராமநாதபுரத்தில் கால்நடை நோய் தடுப்பூசி முகாமினை கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தொடங்கி வைத்தார்.

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், பட்டணம் காத்தான் ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் தேசிய கால்நடை நோய் தடுப்புத்திட்டம் ஏழாவது சுற்று தடுப்பூசி முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் பங்கேற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாமை துவக்கி வைத்தார்கள். ராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கோமாரி நோய் தடுப்பூசிக்கான ஏழாவது சுற்று முகாம் 02.07.2025 முதல் 31.07.2025 வரை நடைபெறுகின்றன.

இதன் மூலம் மாவட்டத்தில் உள்ள சுமார் 72 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் காலை 7 மணி முதல் 10 மணி வரை மற்றும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை கால்நடைகளுக்கான தடுப்பூசி வழங்கும் முகாம் நடைபெறும். கால்நடை வளர்ப்போர் தவறாமல் தங்கள் கால்நடைகளுக்கு தடுப்பூசியினை போட்டு பாதுகாப்புடன் பராமரிக்க வேண்டும். கால் மற்றும் வாய்க்காணை நோயானது நாட்டின மாடுகள், அயல் இன மாடுகள் மற்றும் கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்துவதுடன் பால் உற்பத்தி இழப்பையும் ஏற்படுத்துகிறது.

அதைபோல் எருதுகளுக்கு இந்நோய் தாக்குவதனால் அதன் வேலை திறன் குறைவு ஏற்படும். இளம் கன்றுகள் இந்நோய் தாக்குதலால் இறப்பு ஏற்படும் நிலையும் ஏற்படும். எனவே கால்நடைகளை தாக்கும் கால் மற்றும் வாய்க்காணை நோயினை கட்டுப்படுத்த தடுப்பூசி முகாமில் கட்டாயம் கால்நடைகளை அழைத்துச் சென்று மாவட்டத்தில் ஒரு கால்நடை கூட விடுபடாத அளவிற்கு அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி செலுத்தி கால்நடைகளை நல்ல முறையில் பராமரித்து பொருளாதார இழப்பை தவிர்த்து சிறந்த முறையில் பயன்பெற்றிட வேண்டும் என கலெக்டர் தெரிவித்தார். இதனை தொடர்ந்து கால்நடை வளர்ப்போருக்கு கால்நடை தீவனங்கள் மற்றும் சத்துமாவு பொருட்களை மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் வழங்கினார்கள். இம்முகாமில் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் ரவிச்சந்திரன், உதவி இயக்குநர்கள் அரசு, சுந்தரமூர்த்தி, ராஜா, கால்நடை மருத்துவ அலுவலர்கள் சித்திமர்ஜிதா, முருகராஜன், நந்திதா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட கலர் கலந்து கொண்டனர்.

# தண்டலை கிராமத்தில் திருவெற்றி அய்யனார் கோவில் கும்பாபிஷேக விழா



**அலங்காநல்லூர், ஜூலை 03-**
மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே தண்டலை கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ திருவெற்றி அய்யனார் திருக்கோவில் மற்றும் 21 பரிவார தெய்வங்களுக்கும் மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இரண்டு கால யாகசாலை ஹோமங்களை தொடர்ந்து யாக சாலையில் இருந்து சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க கடம் புறப்பாடாகி அழகர்கோவில், ராமேஸ்வரம் உள்ளிட்ட புனித தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் கோவிலை சுற்றி வலம் வந்து கோவில் கலசத்தில் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதில் சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை தண்டலை திருவெற்றி அய்யனார் கோவில் பங்காளிகள் நாட்டாமை மற்றும் கிராம பொதுமக்கள் இளைஞர்கள் செய்திருந்தனர்.



மதுரை மாவட்டம் தெற்கு வட்டம் சாமநத்தம் கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் கோமாரி நோய் தடுப்பூசி முகாமை கலெக்டர் பிரவீன்குமார் தொடங்கி வைத்து பார்வையிட்டு கால்நடைகளுக்கு தேவையான ஊட்டச்சத்து பெட்டகத்தை கால்நடை உரிமையாளர்களிடம் வழங்கினார்.

# விவசாயிகள் மீது வரி விதிப்பதற்கு கண்டனம்: தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்



**முதுகுளத்தூர், ஜூலை 03-**
ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் விவசாயிகள் மீது வரி போடுவதை கண்டித்தும், விவசாய நிலத்தில் விவசாயம் செய்ய தண்ணீர் கொடுத்திடு, தமிழ்நாடு விவசாய இயற்கை பேரிடர் மழையால் பாதிக்கப்பட்ட மிளகாய் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க கோரியும், பருத்தியை ஒன்றிய அரசு காட்டன் கார்ப்பரேஷன் மூலம் கொள்முதல் செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன் வைத்து தமிழ்நாடு விவசாய சங்கத்தின் சார்பாக ஆர்ப்பாட்டம் வி.தொ.ச மாவட்ட செயலாளர் கே.கணேசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் விவசாய சங்க மாவட்ட தலைவர் எம்.முத்துராமு, மாவட்டச் செயலாளர் வி.மயில்வாகணன், வி.தொ.ச மாவட்ட குழு உறுப்பினர் வி.முருகன், தாலுகா தலைவர் என்.சண்முகையா, சி.ஐ.டி.யு. உள்ளாட்சி மாவட்ட தலைவர் எஸ்.பிரான்சிஸ் ஆகியோர் கண்டன உரையாற்றினர். சி.பி.எம். தாலுகா குழு உறுப்பினர் ஜி.முனியசாமி, விவசாய சங்க மாவட்ட துணை செயலாளர் நவநீதகிருஷ்ணன், சிஐடியு நிர்வாகி பூப்பாண்டி, மூத்த தோழர் எஸ்.கண்ணுச்சாமி, மாற்றுத்திறனாளி சங்க மாவட்ட தலைவர் ராஜேஷ் பலர் கலந்து கொண்டனர்.

# விருதுநகர் ஊராட்சியில் வளர்ச்சி திட்டப்பணிகள்: கலெக்டர் ஆய்வு



**விருதுநகர், ஜூலை 03-**
விருதுநகர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா, நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அரசு திட்டப்பணிகள் மற்றும் நலத் திட்டங்களின் பயன்கள், குறித்து பயனாளிகளிடம் கலந்துரையாடினார்.

விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், ஓ.கோவில்பட்டி ஊராட்சியில், புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள சமுதாயக் கூடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், ஓ.கோவில்பட்டி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் குளம் அமைக்கப்பட்டு, தூர்வாரப்பட்டு வரும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்களிடம் கலந்துரையாடினார்.

அதனை தொடர்ந்து, விருதுநகர் சிட்கோ வளாகத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் கீழ், தமிழ்நாடு சிறுதானிய இயக்க திட்டத்தில், ஒருங்கிணைந்த சிறுதானிய முதல் நிலை சுத்திகரிப்பு மற்றும் மதிப்புக்கூட்டுதல் நிலையமானது ரூ.16.54 லட்சம் மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளது மற்றும் வேளாண் பட்டதாரி இளைஞர்களை தொழில்முனைவோராக்குதல் திட்டத்தில் மானியம் வழங்கப்பட்டுள்ளதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, வேளாண்மை துணை இயக்குநர் செல்வி, விருதுநகர் விற்பனைக்குழு செயலாளர் வேலுச்சாமி, வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் இருந்தனர்.

# வடகாடு மலை கிராமத்தில் பழங்குடியின மக்களுக்கு ஆதார் சிறப்பு முகாம்




**ஒட்டன்சத்திரம், ஜூலை 03-**
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம் வடகாடு ஊராட்சி புலிக்குத்தி காடு பகுதியில் சுமார் 27 க்கு மேற்பட்ட பழங்குடியினர் மக்கள் இதுவரை சொந்தமாக ஆதார் கார்டு ரேஷன் கார்டு, வீடு இன்றி மலைப்பகுதியில் வசித்து வந்தனர். இவர்களின் கோரிக்கையை ஏற்று உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஆறா சக்கரபாணி சீரிய முயற்சியினால் முதல்முறையாக ஆதார் சிறப்பு முகாம் வடகாடு ஊராட்சி மக்கள் தகவல் தொடர்பு மையத்தில் நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் சஞ்சய் காந்தி,வட்ட வழங்கல் அலுவலர்சேவியர், வருவாய் ஆய்வாளர் பூர்ணிமா,கிராம நிர்வாக அலுவலர் சதீஷ்குமார், ஏற்பாட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலகபணியாளர்கள் இந்த முகாமில் கலந்து கொண்டு மலைவாழ் மக்கள் மற்றும் பழங்குடியினருக்கு ஆதார் கார்டு எடுத்தனர் வாக்காளர் பட்டியலில் விடுபட்டவர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை எடுக்கப்பட்டு வங்கி கணக்கு துவங்கப்பட்டு இவர்களுக்கு தேவையான குடும்ப அட்டை 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் பணியாளர் அட்டை உள்ளிட்டா அரசு நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை கிருபா பவுண்டேஷன் நிர்வாக இயக்குனர் சிவகுமார், பால் கடை முருகேசன், ஊராட்சி செயலர் சிவக்குமார் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

# மேலூர் சிவன் கோவில் காமாட்சி அம்மன், கல்யாண சுந்தரேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக விழா



**மேலூர், ஜூலை 03-**
மேலூரில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு காமாட்சி அம்மன் உடனுறை அருள் மிகு கல்யாண சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. 1962 ஆம் ஆண்டுக்கு பின் கடந்த 2 ஆயிரம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து 25 வருடத்திற்கு பின்பு கும்பாபிஷேக விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

பிரமாண்டமாக அமைக்கப்பட்ட யாகசாலையில் கடந்த மாதம் 28 ஆம் தேதி கணபதி ஹோமம் பூஜைநடையுடன் துவங்கி தொடர்ச்சியாக சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

நேற்று யாகசாலையில் இருந்து புனித நீரினை மேலூர் சிவன் கோவில் அர்ச்சகர் சிவ ஸ்ரீ. வாமதேவகா. தட்சினாமூர்த்தி குருக்கள் தலைமையில் கல்யாண சுந்தரேஸ்வர் மற்றும் காமாட்சி அம்மன் கோபுரங்களுக்கு புனித நீர் ஆகம விதிகளின் படி பாரம்பரிய வழக்கப்படி கொண்டுவரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிவாச்சாரியார் வேத மந்திரம் முழங்க அப்போது 10 க்கும் மேற்பட்ட கருட பகவான் வானத்தில் வட்டமிட்டு பக்தர்களுக்கு காட்சியளித்தது. தொடர்ந்து புனித நீரினை கும்பத்தில் ஊற்றி மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. மூலவர் கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

தொடர்ந்து அருள்மிகு காமாட்சி அம்மன், கல்யாண சுந்தரேஸ்வர் சுவாமிக்கு விசேஷ தீபாரணை நடைபெற்றது. மேலூர் மற்றும் சுற்றி உள்ள கிராமங்களை சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் குடும்பத்துடன் வந்து தரிசனம் செய்தனர்.

அதன்பின் பக்தர்களுக்கு அன்னதானம் பரிமாறப்பட்டது. மாலையில் திருக்கல்யாணம் நடைபெற்றது. இரவு பஞ்ச மூர்த்திகள் ஊர்வலம் புறப்பட்டது.

சிறப்பு அழைப்பாளர்களாக பிள்ளையார்பட்டி விகாஸ் ரத்னா டாக்டர் சிவஸ்ரீ பா.பிச்சை குருக்கள், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பெரியபுள்ளான் என்ற செல்வம், இந்து சமய அறநிலையத்துறை மதுரை மண்டல உதவி ஆணையர் து.வளர்மதி, கோவில் அறங்காவலர் குழு தலைவர் மீ.முருகன், அறங்காவல குழு உறுப்பினர்கள் மகேந்திரன், விஜயபாண்டி, கலையரசி, செயல் அலுவலர் பா. வாணி மகேஸ்வரி, சரக ஆய்வாளர் கார்த்திகா, மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா, தாசில்தார் செந்தாமரை, திருக்கோவில் பணியாளர்கள் கருப்புசாமி, காளீஸ்வரன், ராமு, அருண் பாண்டியன், மேலூர் 18 பட்டி கிராம பொதுமக்கள், சுற்றுபுற கிராமபொதுமக்கள், ஏராளமான பக்த கோடிகள் கலந்து கொண்டு சாமி தரிசன செய்து சிறப்பு செய்தனர். கோவில் கும்பாபிஷேகத்தையொட்டி நகரின் முக்கிய பகுதிகளில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# ஒட்டன்சத்திரத்தில் தேசிய மருத்துவர் தின இறகு போட்டி



**ஒட்டன்சத்திரம், ஜூலை 03-**
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் இந்திய மருத்துவ கழகம் ஒட்டன்சத்திரம் கிளை சார்பில் தேசிய மருத்துவர் தின இறகுப்பந்து போட்டி கிளை தலைவர் கருப்பண்ணன் தலைமையில் நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஒட்டன்சத்திரம் செயலாளர் மருத்துவர் ஆசைத்தம்பி பரிசுகள் வழங்கினார்.

பட்ஸ் கல்வி பள்ளி தாளாளர் பொன்கார்த்திக், மாநில நாட்டு நலப்பணித் திட்ட உதவி தொடர்பு அலுவலர் செளந்தர் ராஜ்,எல்.ஐ.சி. மூத்த ஆலோசகர் கனகராஜ், திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவுத்துறை முன்னாள் துணைப்பதிவாளர் டேனியல், வாடிப்பட்டி கூட்டுறவு வங்கி செயலாளர் கணேஷ் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சன் சட்டில் கிளப் முதன்மை ஒருங்கிணைப்பாளர் ஜெயக்குமார் போட்டிக்கான ஏற்பாடுகள் செய்திருந்தார்.

# பாலமேட்டில் பாறை கருப்பசாமி, முத்தாலம்மன் கோவில் கும்பாபிஷேகம்



**அலங்காநல்லூர், ஜூலை 03-**
மதுரை மாவட்டம் பாலமேட்டில் பாறைக்கல் தெருவில் பறையர் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ பாறை கருப்பசாமி, முத்தாலம்மன், பால விநாயகர், பாலமுருகன் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா நடந்தது.

இந்த விழாவில். நான்கு கால யாக பூஜைகளை தொடர்ந்து பல்வேறு ஸ்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு கும்ப கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

பின்னர் வருகை தந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டத.

ஏற்பாடுகளை பாலமேடு பாறைகல் தெரு உறவின் முறை சங்கம் மற்றும் திருப்பணி குழு நிர்வாகிகள். இளைஞர் சங்கத்தினர் விழா கமிட்டியினர் செய்திருந்தனர்.

# கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சி முகாம்




**நத்தம், ஜூலை 03-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான பயிற்சி முகாம் நடந்தது. இதற்கு கல்லூரி முதல்வர் ராஜாராம் தலைமை தாங்கினார். கணினி அறிவியல் துறை தலைவர் சுப்பிரமணி முன்னிலை வகித்தார்.

இதில் மாவட்ட குழந்தைகள் நலம் மற்றும் சமூக நல அலுவலர் விஜயராணி, பெண்கள் நல மேம்பாட்டு அதிகாரி ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு கல்லூரி மாணவர்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் நலத்திட்டங்கள் குறித்தும், மாணவிகள் முன்னேற்றத்திற்கான வழிகாட்டி முறைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசினர். முகாமில் பேராசியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் நேற்று புனித தோமையார் மலை தேவாலயம் உலக புகழ் பெற்ற தேவாலயமாக போப் ஆண்டவரால் அறிவிக்கப்பட்டு, அந்த விழாவிற்கான அழைப்பிதழை பங்கு பேரவைத்தலைவர் சார்லஸ் மற்றும் தாமஸ் மவுண்ட் அதிபர் அருட்த்தந்தை மைகேல் ஆகியோர் வழங்கினர். உடன் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி உடனிருந்தார்.



வேலூர் மாவட்டம் காட்பாடி வடக்கு பகுதி கழக செயலாளர் ஜி.வன்னியராஜாவின் மகள் வ.விஷ்ணுபிரியா-ஹெச்.சுரேஷ்குமார் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்தினார். உடன் அமைச்சர்கள் துரைமுருகன், ஆர்.காந்தி, மாவட்ட செயலாளர்கள் ஏ.பி.நந்தகுமார், எம்.எல்.ஏ., க.தேவராஜி எம்.எல்.ஏ., பாராளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம்.கதிர்ஆனந்த், சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.கார்த்திகேயன், அமுலு விஜயன், ஜே.எல்.ஈஸ்வரப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சு.வெங்கடேசன், பா.மாணிக்கம் தாகூர், தங்கத்தமிழ்செல்வன், மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, மு.பூமிநாதன், பி.அய்யப்பன், துணை மேயர் நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




தஞ்சாவூர் மாவட்டம் டான்போஸ்கோ மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கூட்டரங்கில் நேற்று பள்ளிக்கல்வித்துறை சார்பில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாநில அளவிலான அடைவுத்தேர்வு குறித்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், முதன்மை கல்வி அலுவலர் இ.மாதவன், மாவட்ட கல்வி அலுவலர்கள் சுந்தர், அய்யாகண்ணு, மதியழகன், பழனிவேல், ஆசிரியர் கல்வி, பயிற்சி நிறுவன முதல்வர் கோ.ஆனந்தராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை பெருநகர் வளர்ச்சி குழும தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் ரிப்பன் கட்டிட வளாக கூட்டரங்கில் நேற்று வடசென்னை வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, துணை ஆணையாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடலூர், தஞ்சை மாவட்ட

# இ.பி.எஸ். பிரச்சார பயணத்தில் மாற்றம்

சென்னை, ஜூலை 03-

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, 'மக்களை காப்போம் - தமிழகத்தை மீட்போம்' என்ற தொடர் பிரச்சார சுற்றுப் பயணத்தை கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் தொகுதியில் வரும் ஜூலை 7-ம் தேதி தொடங்குகிறார்.

ஏற்கெனவே வெளியிடப்பட்டிருந்த கடலூர் மற்றும் தஞ்சை மாவட்ட சுற்றுப்பயண விவரங்களில், சில தேதிகளும் இடங்களும் மாற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அ.தி.மு.க. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: இந்த சுற்றுப் பயணத்தை 7-ம் தேதி கோவை மேட்டுப்பாளையம் தொகுதியில் தொடங்குகிறார்.



பின்னர், கவுண்டம்பாளையம் தொகுதிக்கு செல்கிறார். 8-ம் தேதி கோவை வடக்கு மற்றும் தெற்கு தொகுதிகள், 10-ம் தேதி விழுப்புரம் மாவட்டத்தில் விழுப்புரம், விக்கிரவாண்டி, திண்டிவனம் தொகுதிகள், 11-ம் தேதி வானூர், மயிலம், செஞ்சி தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

12-ம் தேதி கடலூர் மாவட்டம் கடலூர், பண்ருட்டி, நெய்வேலி தொகுதிகள், 14-ம் தேதி குறிஞ்சிப்பாடி, விருத்தாசலம், திட்டக்குடி ஆகிய தொகுதிகள், 15-ம் தேதி பெரம்பலூர் மாவட்டத்தில் குன்னம், அரியலூர் மாவட்டத்தில் அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய தொகுதிகள், 16-ம் தேதி கடலூர் மாவட்டம் சிதம்பரம், புவனகிரி, காட்டுமன்னார்கோவில் ஆகிய தொகுதிகள், 17-ம் தேதி மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

18-ம் தேதி திருவாரூர் மாவட்டம் நன்னிலம், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர், 19-ம் தேதி நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் செய்கிறார். 21-ம் தேதி மன்னார்குடி, தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர், கும்பகோணம் ஆகிய தொகுதிகள், 22ம் தேதி தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம், தஞ்சாவூர், திருவையாறு ஆகிய தொகுதிகள், 23-ம் தேதி, ஒரத்தநாடு, பேராவூரணி, பட்டுக்கோட்டை, ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளார்' என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### பரமக்குடி-ராமநாதபுரம் 4 வழிச்சாலை திட்டம்:

# பிரதமர் மோடிக்கு இ.பி.எஸ். நன்றி

சென்னை, ஜூலை 03-

ரூ. 1,853 கோடி மதிப்பில் தொடங்கப்பட உள்ள பரமக்குடி- ராமநாதபுரம் இடையிலான நான்கு வழிச்சாலை திட்டத்தை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வரவேற்பு தெரிவித்துள்ளார். மேலும் இந்த திட்டத்திற்கு ஒப்புதல் அளித்ததன் மூலம் பிரதமர் மோடிக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

பரமக்குடி–இராமநாதபுரம் இடையிலான (NH87) நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக விரிவுபடுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது வரவேற்கத்தக்கது. ரூ. 1,853 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும் இந்த வழித்தட மேம்பாட்டு திட்டமானது, பயண நேரத்தை குறைத்து, பயணப் பாதுகாப்பை மேம்படுத்துவதுடன், தென் தமிழகத்தில், குறிப்பாக ராமேஸ்வரம் புனித யாத்திரைப் பகுதியில் சுற்றுலா மற்றும் வர்த்தகத்தை பெரிதும் ஊக்கப்படுத்தும்.

தமிழ்நாட்டின் சாலை இணைப்புத் திட்டங்களுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னுரிமை வழங்கும் இந்தியப் பிரதமர் மோடிக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வாகன தணிக்கை என்ற...(1-ம் பக்க தொடர்ச்சி)

யாரையேனும் கைது செய்யும்போது பொதுமக்களுக்கு தெரியும் அளவிற்கு செய்யாமலும், அதன் முலம் ஏதாவது பிரச்சனை ஏற்படும் அளவிற்கு உள்ளதாகவும் இருக்கக் கூடாது. தகுந்த முன்னேற்பாடு நடவடிக்கைகளை எடுத்து கைது செய்ய வேண்டும். அதனை பிரபலப்படுத்தும் அளவிற்கு இருக்கக் கூடாது. அதன் முலம் ஏதும் சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். முடிந்த அளவிற்கு பெண் காவலர்கள் தாங்கள் வசிக்கும் சொந்த ஊரிலேயே பணி மாறுதல் வழங்க வேண்டும். குறிப்பாக கர்ப்பிணி பெண்கள், குழந்தை பெற்ற பெண் காவலர்கள்களுக்கு அவர்கள் கேட்கும் இடத்திற்கே பணி மாறுதல் வழங்க வேண்டும்.

சரித்திர பதிவேடு குற்றவாளிகள் மற்றும் சமுக விரோதிகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்ட வேண்டும். அதிகப்படியான தடுப்புகாவல் சட்டத்தில் வைக்க முயற்சிகளை எடுக்க வேண்டும். சட்ட ஒழுங்கு பிரிவில் பணி புரிவதற்கு தகுந்த துணை காவல் கண்காணிப்பாளர்களின் பட்டியலை தயார் செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். மேலும் சரியாகப் பணி புரியாத துணை காவல் கண்காணிப்பாளர்களை பணி மாறுதல் செய்ய இருப்பின் அவர்களின் பட்டியல்களையும் தயார் செய்து அனுப்பி வைக்க வேண்டும்.

வழக்குகளில் தண்டனை பெற்றுத் தருவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக திருட்டு குற்றங்களில் கொள்ளை, கூட்டுக் கொள்ளை, ஆதாய கொலை போன்ற வழக்குகளில் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும், அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அத்தகைய குற்றங்கள் நடைபெறாமல் இருக்க தகுந்த முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். காவல்துறையில் காவலர்கள் முதல் அதிகாரிகள் வரை சுய ஒழுக்கம் கண்டிப்பாக இருக்க வேண்டும், உயர் நிலையில் உள்ள காவல் அதிகாரிகள் இதை பின்பற்றினால் மட்டுமே கீழ்நிலை அதிகாரிகள் மற்றும் காவலர்களை கட்டுப்படுத்த முடியும்.

காவலர்கள் மற்றும் காவல்துறை வாகனங்களை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். விசாரணை கைதிகளை தேவையில்லாமல் துன்புறுத்தக் கூடாது. குற்றக்குழு & சிறப்புக்குழுவில் அனுபவம் உள்ள காவலர்கள் மற்றும் அதிகாரிகளை நியமிக்க வேண்டும். தேவையில்லாத துன்புறுத்தல்கள் மற்றும் அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தேவையில்லாத கஸ்டடி இருக்கக் கூடாது. திருட்டு வழக்குகளை உடனடியாக கண்டுபிடிக்க வேண்டும். முழுமையான பறிமுதல் என்ற பெயரில் விசாரணை கைதிகளை துன்புறுத்தல் கூடாது.

விசாரணை முறை தொடர்பாக சரியான பயிற்சியை முன் அனுபவம் உள்ள அதிகாரிகள் மற்றும் காவலர்கள் கொண்டு வழங்க வேண்டும். விசாரணையின் போது குற்றக்குழு & சிறப்புக்குழுவில் பொறுப்பு அதிகாரி இல்லாமல் தனிப்பட்ட முறையில் எந்த ஒரு காவலரும் விசாரணை செய்யக்கூடாது. ஒரே நபரை முன்று நான்கு நபர்கள் ஒன்றாக சேர்ந்து விசாரிக்க கூடாது விசாரணை என்ற பெயரில் தேவையில்லாத துன்புறுத்தல்கள் கூடாது. எப்போதும் கவனமாக இருக்க வேண்டும்.

வாகன தணிக்கையின் போது கவனமாக செயல்பட வேண்டும் தேவையில்லாத செயல்களில் ஈடுபடக்கூடாது. குடும்பமாக செல்வோரிடம் வாகன தணிக்கை என்ற பெயரில் வன்முறையில் ஈடுபடக்கூடாது. காவல் நிலையம் அல்லது பொது இடங்களில் யாரேனும் ஒருவரால் அசம்பாவிதங்கள் அல்லது தாக்குதல் நடைபெறும் போது அதனை தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். காவலர்கள் சகிப்புத்தன்மையுடன் பணியாற்ற வேண்டும்.

கள்ளச்சாராயம் மற்றும் மெத்தனால் போன்றவைகளின் புழக்கம் எந்த மாவட்டத்திலும் இருக்கக் கூடாது இதில் தனி கவனம் செலுத்த வேண்டும்.எதிர்வரும் விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டங்களில் கடந்த ஆண்டைவிட அதிகமான சிலைகள் வைக்க அனுமதிக்க கூடாது தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். முக்கிய பெரிய பாதுகாப்பு பணிகளில் காவல் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் அதற்கு பதில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கு பணி ஒதுக்கீடு வழங்க வேண்டும் முன்கூட்டியே அனுமதி பெற வேண்டும்.

மாவட்ட கலெக்டர் மற்றும் நீதித்துறை உடன் இணக்கமாக இருக்க வேண்டும். மதம் மற்றும் சாதிய தொடர்பான பிரச்சனைகளுக்கு கடிதம் கொடுத்து மாவட்ட நிர்வாகம் முலம் சரியான தீர்வு காண வேண்டும். காவல்துறை தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் நல்ல எண்ணத்தை வளர்க்கவும் மேம்படுத்தவும் உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கலப்புத் திருமணம், காதல் விவகாரங்கள் போன்றவைகளில் காவல் துறையினர் காவல் நிலையங்களில் கட்டப்பஞ்சாயத்து போன்ற செயல்களில் ஈடுபடுதல் கூடாது.

சி.சி.டி.வி. கேமராக்கள் அதிக எண்ணிக்கையில் பொருத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான வழக்குகளில் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். 60 நாட்களுக்கு மேலாக உள்ள விசாரணை வழக்குகளை உடனடியாக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்படுள்ளது.

### குறைந்தபட்ச செயல்திறன் கொண்ட பகுதியில்

# சிறப்பாக செயல்படுமாறு பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தல்

திருவாரூர், ஜூலை 02-

குறைந்தபட்ச செயல்திறன் கொண்ட பகுதியை சேர்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் சிறப்பாக பணிபுரிய அறிவுறுத்தப் பட்டுள்ளதாக அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான-2025 ஆண்டுக்கான அடைவு தேர்வு குறித்த ஆய்வு கூட்டம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் நேற்று காலை நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் மோகனச்சந்திரன் மாவட்டத்தில் உள்ள 370 தலைமை ஆசிரியர்கள், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சவுந்தர்ராஜன் மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு பின், அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிருபர்களிடம் கூறியதாவது:-

சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த ஆய்வு கூட்டத்திற்கு பிறகு, தேர்வுகளில் குறைந்த மதிப்பெண்கள் எடுக்கும் மாணவர்கள் எந்த பாடத்தில் திறன் குறைந்து இருக்கிறார்கள்? என்பதை ஆய்வு செய்து, அந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட விஷயங்களை வைத்து மாவட்டம் முழுவதும் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், 8-வது மாவட்டமாக திருவாரூரில் குறைந்தபட்ச செயல்திறன் கொண்ட பகுதியை சேர்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்களை நேரடியாக வரவழைத்து, அடுத்த முறை அவர்கள் சிறப்பாக உற்சாகத்துடன், ஊக்கத்துடன் பணிபுரிய அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

மாநில அடைவு திறனாய்வு மூலம் ஒவ்வொரு பள்ளிக்கும் பிராகரஸ் ரிப்போர்ட் கொடுக்கப்பட்டு உள்ளது.

குறிப்பாக கோட்டூர், கொரடாச்சேரி, நன்னிலம், மன்னார்குடி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த தலைமை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், முதன்மை கல்வி அலுவலர் தலைமையில் இதனை செயல்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# தொலைபேசி உரையாடலை ஒட்டு கேட்பது அத்துமீறல்: உயர் நீதிமன்றம்

சென்னை, ஜூலை 03-

குற்றச்செயல்களை கண்டறிவதற்காக தனி நபரின் உரையாடலை ஒட்டுக்கேட்பதை அனுமதிக்க முடியாது என சென்னை ஐகோர்ட் தெரிவித்து உள்ளது.

சி.பி.ஐ. பதிவு செய்த வழக்கு தொடர்பாக கிஷோர் என்பவரது தொலைபேசி உரையாடலை ஒட்டு கேட்க மத்திய உள்துறை அமைச்சகம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த ஐகோர்ட், குற்றங்களை கண்டுபிடிக்க ஒருவரது தொலைபேசி உரையாடலை ரகசியமாக ஒட்டுக் கேட்பதை அனுமதிக்க முடியாது. தனி நபரின் உரையாடல்களை ஒட்டு கேட்பது அந்தரங்க உரிமைக்கு எதிரானது. பொது நலன் சம்பந்தப்பட்ட விஷயத்தில் மட்டுமே ஒட்டு கேட்க முடியும். தனிநபரின் தொலைபேசி உரையாடலை ஒட்டுக் கேட்பது அத்துமீறல்' எனக் கூறி அனுமதியை ரத்து செய்து உத்தரவிட்டனர்.